# போராட்டம்

இதழ் - 21 2015 ஆனி | மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு | 20 ரூபா













# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி . . .







## சமவுரிமை இயக்கம் ஆர்பாட்டம்

கடந்த மே மாதம் 28ம் திகதி அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யக்கோரி நூற்றுக்கும் மேலான மூவின மக்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்று கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக இடம்பெற்றது. இதனை சமவுரிமை இயக்கம் ஒழுங்கமைத்திருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் பகுதிகளில் இருந்து வருகை தந்திருந்த சிறையில் உள்ள கைதிகளின் உறவினர்கள் கண்ணீருடன் பங்குபற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நூற்றுக்கணக்கான தமிழ், சிங்கள, முஸ்லீம் இனங்களை சேர்ந்த அரசியல் கைதிகள் எத்தகைய குற்றச்சாட்டுகள் இன்றியும், சிலர் குற்றச்சாட்டுக்கள் இருந்த போதும் விசாரணை இன்றியும் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது குடும்பங்கள் சொல்லொணா துயரத்தில் இவர்களின் விடுதலைக்காக அலைந்த வண்ணம் உள்ளனர். சிறைகளில் உள்ளவர்களின் சிலரின் குடும்பத்தினருக்கு இவர்கள் உள்ளே உயிருடன் இருப்பது கூட தெரியாது. தமது நிலையை குடும்பத்தினருக்கு தெரியப்படுத்த முடியாதவாறு தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி பக்கம் – 14 இல்

## பெண்கள் மீதான வன்கொடுமையை எதிர்ப்போம்!
## சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு



கடந்த மாத நடுப்பகுதியில், புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். சகோதரி வித்தியாவுக்கும் , மற்றும் பெண்கள் மீதான அனைத்து வன்முறைகளுக்கு எதிராகவும் நாட்டின்பல பாகங்களிலும் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பெண்களுக்கு எதிராக நடைபெறுகின்ற பாலியல் வன்முறைகளுக்கு எதிராக இன– மத பேதங்களை கடந்து சகல பெண்களையும், ஆண்களையும் போராட அறைகூவல் விடுத்து, 25.05. அன்று, கொழும்பு கோட்டை புகையிர நிலையத்தின் முன்னால் சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு– FREE WOMEN விழிப்புணர்வுப் போராட்டத்தை முன்னெடுத்தது. சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் சகோதரிகளும், தோழர்களும், பெண்ணியச் செயற்பாட்டாளர்களும் பங்கெடுத்த இப்போராட்டத்துக்கு அவ் அமைப்பின் ஒருங்கமைப்பாளர், சகோதரி நிலாங்கனி அபேயரத்ன தலைமை தாங்கினார். இப் போரட்டத்தையொட்டி சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:

தொடர்ச்சி பக்கம் – 14 இல்

## துர்நாற்றம் வீசும் குப்பை மேட்டை அகற்றக் கோரிய மக்கள் மீது நல்லாட்சி அரசு வன்முறைத் தாக்குதல்!

கொலன்னாவ – மீதொட்டமுல்ல பகுதியில், குப்பைக் கழிவுகளைக் கொட்டுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி போராடிய மக்கள் மீது நல்லாட்சி அரசு தனது அரச படைகளை ஏவி விட்டு தாக்குதல் தொடுத்துள்ளது. இக் குப்பை மேடுகள் அருகில் உள்ள வீடுகளில் சரிந்து விழுவதாகவும், அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதாகவும் மற்றும் சுகாதார சீர்கேடுகளும் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு நகரில் சேகரிக்கப்படும் சுமார் 700 மெற்றிக் தொன் குப்பைகள் நாளாந்தம் அந்தப் பகுதியில் கொட்டப்படுவதாகவும் அதனால் அங்கு வசிக்கும் மக்களுக்கு சுகாதார கேடுகளும், அச்சுறுத்தல் உள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளும் பல தடவைகள் முறைப்பாடுகள்



செய்த போதும் இன்றுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததால், குப்பைகளை குவிக்கும் இடத்திற்கு முன்பாக அப் பிரதேசமக்கள் கூடி இவ்வாறு எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

அரச படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலின் காரணமாக சகோதரர் நுவான் பேபகே அவர்கள் இரத்தப்போக்கு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?

படிப்பகம்

திருகோணமலை நகரசபையினால் நகர சுத்திகரிப்பு தொழிலாளர்களிற்கு பதவி உயர்வுகளில் இழைக்கப்படும் அநீதிகளிற்கு எதிராகவும் சாதிய ரீதியான பாகுபாடுகளிற்கு எதிராக மே மாதம் 2ம் 3ம் திகதிகளில் நகரசபைக்கு முன்னால் போராட்டம்

**கேள்வி:** உங்களுடைய பிள்ளைகள் கல்வி கற்று பெரிய படிப்புக்கள் படித்திருந்தாலும், அவர்களுக்கு வழங்கப்படும் தொழில் என்பது நகரசுத்திகரிப்புத் தொழிலாகத் தானே இருக்கிறது..?

இந்தத் தமிழரசுக்கட்சி தான் எமது மக்களைச் சீரழித்துக் கொண்டிருக்கிறது. இருந்தும் இந்தக் கட்சியை விட்டு விலத்த முடியாமலும் இருக்கின்றது. ஆளும் கட்சிக்கோ அல்லது வேறு கட்சிக்கோ நாம் வாக்களித்து முன்னுக்கு வருவோமாக

# சாதி அடிப்படையில்

# எமக்குச் சமவுரிமை மறுக்கப்படுகிறது



ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இப் போராட்டம் குறித்து கிழக்குப் பிராந்திய சுத்திகரிப்புத் தொழிலாள சங்கத் தலைவர் சாந்தன் கண்ணப்பனுடன் "போராட்டம்" ஓர் நேர்காணல்.

**கேள்வி:** நீங்கள் கிழக்கு மாகாண உள்ளூர் ஆட்சி மன்ற சுத்திகரிப்பு தொழிலாள சங்கத் தலைவராகவும், மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கும் தலைவராகவும் இருந்து வருகின்றீர்கள், அந்தவகையில் உங்கள் போராட்டம் பற்றி கூறுங்கள்.

**சாந்தன்:** கிழக்கு மாகாண நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர் சங்கத்தின் 'முதல் நோக்கமானது தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதே. மே 2ம், 3ம் களில் நடாத்தப்பட்ட போராட்டம் என்பது எங்கள் சுகாதாரத் தொழிலாளர்களின் உரிமைப் போராட்டமாகும் . இந்த உரிமைப் போராட்டத்தின் போது உரிய மாகாணசபை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு போது, அவர்கள் எமது கோரிக்கைகளையும் எம்மையும் புறக்கணிக்கப்பட்டதுக்கமைய எமது இந்தப் போராட்டத்தை நடாத்தியிருந்தோம். இந்தப் போராட்டத்தின் கோரிக்கைகள் என்னவென்றால் சுகாதாரத் தொழிலாளர்களின் மேற்பார்வையாளர் நியமனங்களை, எங்களுக்கு வழங்காமல் நகரசபைத் தலைவர், செயலாளர் ஆகியோரின் உறவினர்களுக்கு வழங்கி இருப்பதாகும்..

**கேள்வி:** தற்போது இந்தப் போராட்டத்தில் இறங்கியிருக்கும் மக்கள் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன். இதில் யார் போராடுகின்றார்கள் இவர்களின் வரலாறுகள் என்ன...? இதன் பின்னணி என்ன...?

**சாந்தன்:** இந்த மக்கள் கடந்த காலங்களிலே இந்தியாவிலிருந்து தொழிலுக்காக வந்த இந்திய வம்சாவழியினர். இவர்கள் வந்த காலங்களிலிருந்து இன்று வரையும் திருகோணமலையிலும் அதன் அண்டிய பிரதேசங்களிலும் சுகாதார சுத்திகரிப்பு தொழிலை வாழையடி வாழையாக செய்து வருபவர்கள். இருந்தும் இவர்களது அடிப்படை உரிமைகளான இருப்பதற்கான ஒரு இடம், உயர் பதவிகள் என்றோ எந்த உரிமைகளும் இல்லாமலே இவர்கள் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒல்லாந்தர்கள் இலங்கையை ஆண்டகாலத்திலே இருந்தே குதிரைகளை அடைக்கும் லயங்களிலேயே வாழத் தொடங்கியவர்கள் அதே குடிசைகளில் தான் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். சமூகத்தில் எல்லா விடையங்களிலும் புறக்கணிக்கப்படுவர்களாகவும், சாதியில் குறைந்தவர்கள் என்பதாலும் தமிழர்கள் மத்தியில் இவர்களுக்கு எந்தவிதமான பதவிகளும் வழங்கப்படாமலும், சமஉரிமைகள் கொடுக்கப்படாமலும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த காலங்களில் எமது இளைஞர்களும் தேசியப் போராட்டத்தில் களமிறங்கி போராடியதன் நிமித்தம் சாதிப்பிரச்சினைகள் ஓரளவு குறைந்திருந்தது. இயக்கங்கள் இல்லாமல் அழிந்த பின்னர் நாங்கள் மீண்டும் சாதிரீதியாக அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வருகின்றோம்.

**சாந்தன்:** கல்வி கற்ற பல பட்டதாரிகள் இருக்கின்றார்கள். எமது பட்டதாரிகள் தகுதியான பணிக்காக போராடிக் கொண்டிருப்பதை அறிந்திருப்பீர்கள். தமிழரசுக் கட்சியோ அல்லது எந்தத் தமிழ்கட்சியோ எமது மக்களை முன்னெடுத்துச் செல்வதற்காக வேலை வாய்ப்புக்களை வழங்கி எமது சமூகத்தைக் கொண்டு வழிநடாத்த முன்வருவதில்லை.

நகரசபையை தொடர்ந்து ஆட்சி செய்யும் தமிழரசுக்கட்சிகளிடம் எமது படித்த இளைஞர்கள் போய் வேலை வாய்ப்புக் கேட்ட போது உங்களுடைய தகப்பனுடைய தொழிலையே உங்களுக்கும் தரலாம். ஆனால், உங்களுக்கு உயர்ந்த பதவிகள் வழங்கப்படமாட்டாது என்று சொல்லி சாதிரீதியாக எம்மை புறக்கணித்து வருகின்றது.

**கேள்வி:** தமிழரசுக்கட்சி உங்களை சாதி ரீதியாக புறக்கணிக்கின்றதா.. அல்லது கங்காணியாய் இருப்பவர்களோ... அல்லது தலைவர்களாக இருப்பவர்களோ அல்லது அரசியல் ரீதியாக இந்த வசதிகளைச் செய்து தர மறுக்கின்றார்களா...?

**சாந்தன்:** அரசியல் மற்றும் அதிகார தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் தான் இதைச் செய்கிறார்கள். உதாரணமாக, திருமலை நகரசபையில் மேற்பார்வையாளர் பதவிகள் வெற்றிடமாய் வந்த வேளைகளில் இந்தப்பதவிகளை இவர்களுக்கு வழங்குங்கள் என்று எமது சங்கம் கேட்ட போதும் வழங்காமல், நகரசபைத் தலைவர் தன் உறவினர்களுக்கு அப்பதவியை வழங்கியதன்



நிமிர்த்தமே இந்தப் போராட்டம் முன்னெடுக்க வேண்டியதாயிற்று. இங்கு முக்கியமாக திருகோணமலை நகரசபையைப் பார்க்கும் போது ஏகாம்பரம் தொடக்கம் சிவராஜா வரையில் 14 தலைவர்கள் இந்த நகரசபையை ஆண்டு வந்திருக்கின்றார்கள். இந்தப் 14 தலைவர்களும் தமிழரசுக்கட்சியின் ஆட்சி அமைப்புக்குள் இருக்கும் நகரசபைக்குச் சொந்தமானதானாலும்– எமது மக்கள் பல நூறு வருடம் குடியிருக்கும் நிலங்களை எமது மக்களுக்குப் பகிர்ந்தளிக்காமல் எம்மை அடிமைகளாகவே நடாத்தி வருகின்றனர்.

தமிழ் தேசியகூட்டமைப்புத் தலைவர் இரா சம்பந்தன் அவர்களுடன் பாராளுமன்றத் தேர்தல் காலங்களிலும் சரி நகரமன்ற தேர்தல் காலங்களிலும் சரி வாக்குச் சேர்க்க வரும் காலகட்டங்களில் எமது காணி உரிமை பற்றிய இந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றோம்.

ஆனால் அவரோ இதுவரை எமக்காக மத்திய அரசாங்கத்திடம் இந்தக் காணிகள் வழங்கும் முகமாக ஒரு கடிதமேனும் வரைந்தது கிடையாது. எம்மக்கள் பற்றி சிந்திப்பதும் கிடையாது. ஆனாலும் நாம் தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியில் தான் இருக்கின்றோம். இந்தக்கட்சிக்குத் தான் தொடர்ந்தும் வாக்களித்துக் கொண்டிருக்கின்றோம்.

இருந்தால் தமிழ் மக்கள் மத்தியில் எம்மீது பல குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படும். நாங்கள் காட்டிக் கொடுக்கும் தமிழர்கள் எட்டப்பத் தமிழர்கள் இவர்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து விட்டார்கள், என்று தமிழ் மக்களும் இந்தக் கட்சியும் எம்மை மேலும் புறக்கணிப்பார்கள்.

**கேள்வி:** உங்களுடைய சமூகத்தினர் ஏறக்குறைய 9 கிராமங்களில் பரந்து சீவிக்கின்றார்கள், 2009 புலிகளின் அழிவுக்குப் பின்னர் இன்று உங்கள் சமுதாயம் மீது நடாத்தப்படுகின்ற ஒடுக்கு முறைகளும் உரிமை மறுப்புக்களும் சாதி ரீதியான விடையமாகத் தான் எல்லோராலும் கணிக்கப்படுகின்றது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன...?

**சாந்தன்:** முன்பு புலிகள் ஆட்சியில் இருக்கும் போது புலிகளின் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து அரசியல்வாதிகளும் மக்களும் சாதிரீதியாக ஒதுக்காமல் எங்கள் எல்லோரையும் மதித்து ஓரளவுக்கேனும் சமமான உரிமையை வழங்கி வந்தார்கள். இன்று மீண்டும் பழையபடியே இந்த மக்களாலும் அரசியல்வாதிகளாலும் ஒடுக்கப்படுகின்றோம். இன்று நாங்கள் சிங்கள மக்களால் ஒடுக்கப்படுவதை விட தமிழ்மக்களாலேயே ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் யாழ்ப்பாணம் மூதூர் போன்ற பகுதிகளிலே தமிழ்ப்பிரதேசங்கள் சூறையாடப்படுகின்றது என்று போராடுகின்றார்கள். ஆனால் எங்களுக்கோ எங்கள் சொந்த நிலங்களை தாங்கோ என்று இந்தத் தமிழ் தலைமைகளிடமும் கையேந்து நிலையே காணப்படுகின்றது.

**கேள்வி:** தமிழ்கூட்டமைப்பு சார்ந்த குறிப்பிட்ட அரசியல்வாதிகளுடன் தொடர்பு கொண்டு உங்களுடைய சமூதாயத்துக்கு ஏன் உயர் வேலைவாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றது என்று கேட்ட போது அவர்கள் சாதியை வைத்து திட்டியதாக தகவல்கள் வந்திருக்கின்றது, இது பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா...?

**சாந்தன்:** நகராட்சி மன்றத்தில் தற்சமயம் ஆட்சியில் இருக்கும் கந்தசாமி சிவராஜா என்பவரே இந்த விடையத்தில் நேரடியாகச் சாதியைச் சொல்லி, நான் இருக்கும் வரையில் உங்கள் சாதியில் இருப்பவர்களுக்கு ஒரு பதவியையும் வழங்கமாட்டேன் என்று தெட்டத் தெளிவாக எங்களுக்கு நேரடியாகவே சொன்னார். இது சம்பந்தமாக அவருடன் நேரடியாகவே சண்டை செய்திருக்கின்றோம். வாக்குவாதப்பட்டிருக்கின்றோம்.

**கேள்வி:** உங்களுடைய போராட்டம் பற்றி இணையத்தளங்களிலும் குறிப்பாக புதிய ஜனநாயக முன்னணியின் இணையத்தளத்தினூடகவும், ஜனரல (சிங்களப்பத்திரிகைகள் மூலமாகவும் நாடு முழுவதும் இந்தப்பிரச்சினை பரப்பப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் இந்தப் போராட்டத்தை நிறுத்தாது தொடர்ந்தும் நடாத்தப் போவதாக அறிவித்திருக்கின்றீர்கள், நீங்கள் எந்தவகையான ஆதரவை தமிழ் மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்கள்...?

**சாந்தன்:** எமது உரிமைக்காக போராடும் பட்சத்தில் மத்திய அரசாங்கத்துடன் போராடுவதை விட தமிழரசுக் கட்சிகளுடனேயே போராட வேண்டியுள்ளது. தமிழரசுக் கட்சி எமது மக்களை நீங்கள் தொடர்ந்து புறக்கணித்து ஒதுக்கி வருகின்றது இனிவரும் காலங்களில் எம் மக்களையெல்லாம் ஒன்றிணைத்து தனித்து நின்று எமது உரிமைக்காகப் போராடி நகராட்சி மன்றம் அல்லது மாகாண சபை போன்ற தேர்தல்களில் போட்டியிடும் நிலைக்குள் நாம் தள்ளப்படுகின்றோம். இப்போராட்டத்துக்கு அனைத்து முற்போக்குச் சக்திகளும், புலம்பெயர்ந்த தமிழர்களும் ஆதரவு தரவேண்டும் .

# மக்களின் வியாகூலங்களும், தமிழ் அரசியல் தலைமைகளின் தேர்தல் வியூகங்களும்



இலங்கையில் நல்லாட்சி வந்துவிட்டது. நல்லாட்சியின்கீழ் நாட்டுமக்கள் எப்படி வாழ்கிறார்கள்? இந்த நல்லாட்சியில் வாழ்வது யார்? வதைபட்டு சாவது யார்? பிழைப்பவர் யார்? தங்கள் பிழைப்புக்காக மக்களை மிதிப்பவர் யார்?

இலங்கையில் ஜனநாயகத் தேர்தல் ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்த நாள்முதல் இன்றுவரை மக்களுக்காக—மக்கள் நலன் கருதி—மக்கள் வாழ்வை மேம்படுத்தும் வகையில் காரியங்கள் நடைபெறவில்லை. மாறாக மக்களின் பெயரால் மக்களைச் சுரண்டும்——மக்களை நசுக்கும்—மக்களை அழிக்கும் அரசியல்தான் தொடருகிறது.

ஒவ்வொரு தேர்தலின் போதும் மக்கள் வர்க்க——இன—மத—பிராந்திய—பால் ரீதியாக பிரிக்கப்பட்டு மோதவிடப்படுகிறார்கள். அதேவேளை மக்களின் துன்பங்கள்—துயரங்கள்—அவலங்கள்—பிரச்சனைகள் யாவும் அக்குவேறு ஆணிவேறாக பிரித்து அலசப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வைக்கப்பட்டு வாக்குறுதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. சுதந்திர இலங்கையின் கடந்த 67வருட கால ஜனநாயக ஆட்சியில் இந்நாட்டு மக்கள் பெற்ற நன்மை தீமை யாது? அதன் வரலாறுதான் என்ன?

காலங்காலமாக மக்களுக்காக எனக் கட்டியம் கூறியபடி கட்சி கட்டியவர்கள்—அதனை வழி நடத்தியவர்கள்——அதனால் தேர்தலில் மக்கள் பிரதிநிதிகள் ஆகியவர்கள் அந்த மக்களுக்கு ஆற்றிய சேவை எதுவுமே இல்லை. மாறாக இந்த மக்களுக்குத் தொடர்ந்து அவலங்களை ஏற்படுத்தி அதனால் உண்டாகும் அம் மக்களுடைய வியாகூலங்களில் தாங்கள் குளிர்காய்வதையே குறிக்கோளாகக் கொண்டு இன்றுவரை செயற்பட்டு வருகிறார்கள்.

பிரித்தானிய ஆக்கிரமிப்பு ஆட்சியாளரின் நேரடி நிர்வாகத்தின் போதுதான் 1915ல் இலங்கையில் சிங்கள——முஸ்லீம் இனக் கலவரம் இடம்பெற்றது.

1936ல் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் உருவான அரச சபையின் ஆட்சியில் விவசாய அமைச்சராக இருந்த டி.சேனநாயக்கவினால் கிழக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றத்தினால் முஸ்லீம்—தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டன.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் 1956ல் தமிழர்களுக்காக தமிழ் தலைவர்கள் கொழும்பு பாராளுமன்றம் முன் சத்தியாக்கிரகம் இருந்து சிங்களக் குண்டர்களிடம் அடி வாங்கினார்கள். அதன் பின்னணியில் கல்லோயாக் கலவரம் இடம்பெற்று 150 தமிழர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் 1957ல் பண்டா——செல்வா ஒப்பந்தமும் கைச்சாத்தானது. வவுனியாவில் தமிழரசு மாநாடு நடாத்த ஏற்பாடு செய்தபோது 1958ல் கலவரம் வெடித்தது. இக் கலவரத்தில் 1000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். இவைகள் 1960ல் தேர்தலில் பிரச்சாரம் ஆகியது. 1961ல் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகமும் அதன் தொடர் சம்பவங்களும் 1965 தேர்தலுக்குப் பிரச்சாரமாக அமைந்தன. 1965ல் டட்லி—செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 1970ல் ஆட்சிக்கு வந்த அரசு—அதன் புதிய குடியரசுப் பிரகடனம்—அதன் இனவாதக் கொள்கையின் நடைமுறைத் திட்டங்கள் ஆகியவற்றை தமிழ் தலைமைகள் அரசியல் மூலதனமாக்கியது. தமிழீழ சோசலிசக் குடியரசு என்ற தேர்தல் முழக்கத்துடன் 1977ல் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க் கட்சியாக அமர்ந்தது. விளைவு 1977ன் இனக் கலவரம் ஆகியது. அதில் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். இளைஞர்களின் வன்முறையும் தலைவர்களின் அரசியல் தந்திரோபாயங்களும் சேர்ந்து 1981ல் யாழ்நகர எரியூட்டலுக்கு மத்தியில் நடாத்தப்பட்ட மாவட்ட சபைத் தேர்தலில் தமிழ்த் தலைவர்களுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தது. தமிழ்த் தலைவர்கள் நல்லூரில் நந்திக் கொடியேற்றி தமிழீழத்தின் குட்டிப் பாராளுமன்றம் கிடைத்து விட்டதெனக் கூறிக் குதூகலித்தனர். தொடர்ந்து 1982ல் அரச அடக்குமுறைகள்——இளைஞர்களின் ஆயுத மிரட்டல்கள் மத்தியில் நடாத்தப்பட்ட உள்ளாட்சி சபைத் தேர்தலிலும் த.ஐ.வி.முன்னணி அமோக வெற்றியீட்டியது. தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட அரசுக்கெதிரான ஆயுத வன்முறைகள் 1983ன் இனக் கலவரத்திற்கு இட்டுச் சென்றன. இதனைத் தொடர்ந்து தமிழர்களுக்கென ஒரு தனிநாடு கோரி நடாத்தப்பட்ட யுத்தத்தில் 1 இலட்சம் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

1990ல் வடக்கிலிருந்து முஸ்லீம் மக்கள் அனைவரும் உடுத்த உடையுடன் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

இவற்றிற்கு நடுவில் தென்னிலங்கையில் 1971லும் 1988—89லும் இடம்பெற்ற ஆயுதக் கிளர்ச்சிகளில் சுமார் 70 ஆயிரத்திற்கும் அதிகமான சிங்கள மக்கள் கொல்லப்பட்டனர்.

யூலை 1983 முதல் தமிழர்களின் தாயகமான தமிழீழம் நோக்கி முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போராட்டம் மே 2009ல் தமிழ் மக்களுக்கு ஒரு வன்னிப் பேரழிவையும் அதேவேளை ஒரு தலைகுனிந்த வாழ்வையும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஒரு வெற்றி இறுமாப்பையும் அத்துடன் ஒரு சர்வாதிகார ஆட்சி முறையையும் வழங்கியது.

2009ல் தமிழர்களின் தனிநாட்டுக்கான யுத்தம் முடிந்து இன்றுடன் 6 வருடங்கள் கடந்து விட்டன. இலங்கையில் தமிழர்களின் இன்றைய நிலை யாது?

(1) உறவுகளைப் பலிகொடுத்து விட்டுப் பரிதவிப்பவர்கள்.
(2) உறவுகளை இழந்ததனால் புத்திபேதலித்தவர்கள்
(3) சுயமாக இயங்க முடியாதவர்கள்
(4) குடியிருக்க கூரையின்றி தவிப்பவர்கள்.
(5) உணவு—உடையின்றி கையேந்தி நிற்பவர்கள்.
(6) கற்க வசதியின்றி உதவிக்கு அலைபவர்கள்.
(7)சொந்த நாட்டுக்குள்ளேயே அகதிகளாக அல்லற்படுபவர்கள்.
(8) பாதுகாப்பற்ற சூழலில் வாழும் பெண்கள்.
(9) அச்சத்துடன் நடமாடும் மக்கள்.
(10) சொந்த வீட்டுக்குள்ளேயே பயத்துடன் சீவிக்கும் குடும்பங்கள்.
(11) பெற்றோரை இழந்த பிள்ளைகள்.
(12) பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்.
(13)வாழ்க்கைத் துணையிழந்தவர்கள்.
(14) கடத்தப்பட்டோருக்காக—காணாமல் போனவர்களுக்காக—காணிக்காக—கல்விக்காக——மருத்துவ வசதிக்காக—தொழில் செய்யும் உரிமைகளுக்காக—குடிநீருக்காக—குடியிருக்கும் நிலத்தடி உரிமைக்காக வீதியில் இறங்கிப் போராடும் மக்கள்.
(15) தனது சொந்த வீட்டுக்கு——தான் பிறந்து வளர்ந்த ஊருக்குத் திரும்பும் உரிமை மறுக்கப்படுபவர்கள்.

இலங்கையில் ஒன்றாக இருந்த வட—கிழக்கு மாகாணம் 2010ல் வடக்கு கிழக்கு எனப் பிரிக்கப்பட்டிருந்தது. மூன்றரை இலட்சம் தமிழ் மக்கள் பரந்த வெளிச் சிறைமுகாம்களில் அடைக்கப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட—சரணடைந்த போராளிகள் இராணுவச் சிறைமுகாம்களில் சித்திரவதைப்பட்டுக் கொண்டிருந்தனர். கைது—கடத்தல்கள்—காணாமற் போதல்கள்—பெண்கள்மீதான வன்முறைகள் நாளாந்த நிகழ்வுகளாக இருந்தன. அதே ஆண்டில் சிங்கள சர்வாதிகார ஆட்சியின் அடக்குமுறையின் அச்சுறுத்தல்கள் மத்தியில் நடாத்தப்பட்ட தேர்தலில் அக்டோபர் 2001ல் ஆயுதப் போராட்டத்தின் ஊதுகுழலாக வடிவமைக்கப்பட்டு 2001லும் 2004லும் தேர்தல்களில் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்று அங்கே சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாக செயற்பட்டு வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்னிப் பேரழிவை முன்னிறுத்திப் பிரச்சாரம் செய்து 14 பாராளுமன்ற உறுப்பினர்களை வென்றெடுத்தது.



2013ல் நடைபெற்ற வட மாகாண சபைத் தேர்தலில் எம்மிடம் ஆட்சி அதிகாரம் தந்தால் வானவில்லை வளைத்துப் பிடித்து வில்லாக்கிக் காட்டுகிறோம் என மக்களிடம் வாக்குறுதி வழங்கி வெற்றி பெற்று மாகாண சபை அமைத்தார்கள். மக்களின் துன்ப துயரங்கள் நீங்கவேயில்லை. உயிரிழந்து – உறவுகளை இழந்து – உடைமைகளை இழந்து – வாழ்விழந்து – வாழ்வாதாரங்களை இழந்து – உண்ண உணவின்றி – உறங்க இடமின்றி – உதவி கேட்க எவருமின்றி பரிதவிக்கும் மக்களைக் கவனிப்பதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கு நேரமுமில்லை. அம் மக்களைப் பற்றிய கரிசனையும் இல்லை. அவர்களது இலக்கு யாவும் மக்களை ஆளும் அதிகாரம் பற்றியதே. அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி என்பது போல் பொலிஸ்—காணி அதிகாரம் வேண்டும் என அடம்பிடிக்கிறார்கள்.

மாகாண சபையைக் கைப்பற்றிய நாளிலிருந்தே இவர்கள் அடுத்து நடைபெற உள்ள பொதுத் தேர்தலுக்கான முன்னரங்க நிலைப்பாடுகளையும் முன்னேற்பாடுகளையும் பற்றி சிந்திக்கத் தொடங்கி விட்டனர். ஆளுக்கு ஆள்— கட்சிக்குக் கட்சி உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்புகளை வலுப்படுத்திப் பாராளுமன்றம் நுழைவதற்கான வழிமுறைகள் பற்றிய ஆலோசனைகளைப் பெற்றுவருகின்றனர். இந்த நடவடிக்கைகள் கடந்த ஜனவரி 8 முதல்

தொடர்ச்சி பக்கம் 14 இல்

# திருமலையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சாதிவெறி!!!



சக்கிலியர்கள் என்று இந்து சாதி அமைப்பு என்னும் கொடிய பேய்களினால் அழைக்கப்படும் துப்புரவுத் தொழிலாளர்கள் வழமையான மனிதர்கள் அல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த திருகோணமலை நகரசபை உபதலைவரான சேனாதிராஜா ஸ்ரீஸ்கந்தராஜா என்ற சாதி வெறிபிடித்த நபர் ஊளையிட்டிருக்கிறார். இந்த இருபத்தொராம் நூற்றாண்டிலும் ஒரு மனிதன் தன் சக மனிதர்களை தமக்கு சமமில்லாதவர்கள், வழமையான மனிதர்கள் அல்ல என்று சொல்லும் கொடுமை, இழிவு, காட்டுமிராண்டித்தனம் நடந்திருக்கிறது. அதுவும் தமிழ் மக்களிற்காக போராடுவதற்காகவே அவதாரம் எடுத்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இந்த நபர் தன் சக தமிழ் மக்களைப் பார்த்து இப்படி குரைத்திருக்கிறார்.

மனிதக் கழிவுகளை துப்புரவு செய்ய அந்த தொழிலாளர்கள் வேண்டும். ஆனால் அவர்களிற்கு நிரந்தரப்பணி என்ற உத்தரவாதம் கிடையாது, சம்பள உயர்வு கிடையாது. அவர்களின் மேற்பார்வையாளர்கள் எப்பொழுதும் உயர்சாதியினர்தான். எவ்வளவு படித்திருந்தாலும் அந்த தொழிலாளர்களின் பிள்ளைகள் மேற்பார்வையாளர்களாக வர சாதிவெறியர்கள் அனுமதிப்பதில்லை. இவற்றை எதிர்த்து திருகோணமலை நகர துப்பரவுத் தொழிலாளர்களான அந்த மக்கள் போராடுகிறார்கள். ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் போராடினால் சாதிவெறி பிடித்த நபர்கள் எப்படி பொறுத்துக் கொள்வார்கள். அய்யா, நயினார் என்று கூனிக்குறுகி நிற்காமல் தொழிற்சங்கம் அமைத்து உரிமைகளிற்காக குரல் உயர்த்தினால் ஆண்டைகளினால் எப்படி பொறுத்துக்கொள்ள முடியும். கீழ்வெண்மணியில் கோபாலகிருஸ்ண நாயுடு ஒடுக்கப்பட்ட மக்களை தீயிட்டுகொன்றான். இவன் ஏழைகள் ஒடுக்கப்பட்டவர்கள் மனிதர்கள் அல்ல என்கிறான்.

"அடங்காத்தமிழன்" சுந்தரலிங்கம் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் பூசாரி துரைசாமியோடு சேர்ந்து போர்க்கோலம் பூண்டார். ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணியை, ஈழத் தமிழர்களிற்காக தொடங்கி முதன் முதலில் தமிழீழம் கேட்ட செல்லப்பா சுந்தரலிங்கம் மாவிட்டபுரத்தில் களம் கண்டது கொதிக்கும் எண்ணெயிலும், கொழுந்துவிட்டு எரியும் நெருப்பிலும் தமிழ்மக்களை கொன்று குவித்த சிங்கள இனவெறிக் காடையர்களை எதிர்த்து அல்ல. சிங்கள இனவெறியர்களின் ஏவல் நாய்களான இலங்கை இராணுவத்தையோ, இலங்கை காவல் துறையை எதிர்த்தோ அல்ல. ஆலயங்களில் வழிபட வழிவிட வேண்டும் என்று கேட்டு வந்த தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களை எதிர்த்துதான் இந்த ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணியின் வீரசிகாமணி போர் தொடுத்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முந்தைய அவதாரங்களான தமிழ் காங்கிரஸ் கட்சி, தமிழரசுக் கட்சி என்னும் வலதுசாரி மக்கள் விரோதக் கும்பல்களின் வரலாறு முழுவதும் வெள்ளாள சாதிவெறியின் வரலாறாகவே இருந்து வந்திருக்கிறது. 1958 இல் இலங்கையில் இனக்கலவரம் முழுத் தமிழ் மக்களிற்கும் எதிராக சிங்கள தேசியவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழ் மக்கள் சிங்கள இனவாதிகளால் அடிமைப்படுத்தப்பட்ட அதேநேரத்தில் தமிழ் மக்களின் ஒரு பகுதி தமிழ் மக்கள் சைவ வெள்ளாள சாதிவெறியர்களால் ஒடுக்கப்பட்டார்கள். தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர், தமிழரசுக் கட்சியினர் தமது வெள்ளாள சாதி பாசத்தால், மேல்தட்டு வர்க்கப் பாசத்தால் வெள்ளாள சாதி வெறியர்களுடன் சேர்ந்து நின்றனர்.

"சங்கானைக்கென் வணக்கம் சரித்திரத்தில் உன்நாமம் மங்காது, யாழகத்து மண்ணிற் பலகாலம் செங்குருதிக் கடல் குடித்துச் செழித்த மதத்துக்குள் வெங்கொடுமைச் சாக்காடாய் வீற்றிருந்த சாதியினைச் சங்காரம் செய்யத் தலைத்தெழுந்து நிற்கின்ற சங்கானைக்கென் வணக்கம்" என்று அறுபதுகளில் பொதுவுடமைக் கட்சியின் தோழர்கள் செங்கொடி ஏந்தி சாதிவெறிக்கு எதிராக சங்கானையில் போராடியதை கவிஞர் சுபத்திரன் வணங்கி கவிதை பாடினார். ஆனால் "தமிழர் தளபதி" அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் "அது சங்கானைப் போராட்டம் அல்ல சங்காய் போராட்டம்" என்று மாவோயிச கட்சியின் போராட்டத்தை சாதி வெறியர்களுடன் சேர்ந்து எதிர்த்தார். 2012 இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பச் சேர்ந்த வவுனியா நகரசபைத் தலைவரினால் துப்புரவுத் தொழிலாளர்கள் "வெளியே போங்கடா சக்கிலிய நாயளே" என இழிவு படுத்தப்பட்டனர்.

இன்றைவரைக்கும் இந்தக் கட்சிகளின் தலைவர்கள் வெள்ளாளர்கள்தான். இனக்கலவரங்களிற்கு பின்பு பெரும்பாலான



வெள்ளாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியதால் இடைச்சாதிகள், ஒடுக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை வீதம் அதிகரித்தாலும் அன்றைய சம்பந்தன் முதல் இன்றைய சுமத்திரன் வரை தமிழர் தலைமைகள் வெள்ளாளர்களே. சைவக் கோவில்களில் பூசை செய்வது அய்யர்மார்களின் பிறப்புரிமை, ஆதிக்கம் செய்வது வெள்ளாளர்களின் பிறப்புரிமை. போப்பு வெள்ளையினத்தவராக மட்டுமே இருப்பதுபோல தமிழ் கத்தோலிக்க பிசப்புகள் ஊர்காவற்துறை கரம்பன் வெள்ளாளர்களாக மட்டுமே இருப்பார்கள்.(வெள்ளாளர் அல்லாத தற்போதைய பிசப்பான இம்மானுவேல் தோமஸ் சவுந்தரநாயகம் மட்டுமே இவ்வளவு நீண்டகாலத்தின் ஒரேயொரு விதிவிலக்கு. புரட்டஸ்தாந்து சபைகளான அங்கிலிக்கன், தென்னிந்திய திருச்சபை, மெதடிஸ்ட் சபைகள் இன்றுவரைக்கும் வெள்ளாளரை விட்டு பிரிவதுமில்லை, வெள்ளாளரை விட்டு விலகுவதுமில்லை.

இந்த சாதிவெறிக் கொடுமைகளை, உயர்சாதி ஆதிக்கத்தை இடதுசாரிகளே தொடர்ந்து எதிர்த்து வருகின்றார்கள். இன்று நாம் இவற்றைப்பற்றி பேசும்போது சாதியைப் பற்றி பேசி தமிழர்களைப் பிரிக்கிறார்கள் என்று சில குள்ள நரிகள் ஊளையிடுகின்றன. சாதித் துவேசம் காட்டுபவன் மக்களைப் பிரிப்பதில்லையாம், அந்தக் கொடுமைகளை எதிர்ப்பவர்கள்தான் பிரிக்கிறார்களாம் என்று தமிழர் ஒற்றுமை, தமிழ்த் தேசியம் என்ற முகமூடிகளை போட்டுக்கொண்டு இந்த சாதி வெறிநரிகள் ஊளையிடுகின்றன. மானிப்பாய் மருதடியில் வண்ணார் சமுகத்தவர்களிற்கு அநீதி இழைக்கப்பட்டது. இதைப்பற்றி எவனும் வாயே திறக்கவில்லை.

மருதடிப் பிள்ளையார் கோயில் சாதிக் கொடுமையைப்பற்றி எழுதியபோது அது உண்மைதான் ஆனால் அது தனிமனிதர்கள் விட்ட தவறு என்று சிலர் விஞ்ஞான விளக்கம் கொடுத்தனர். கோயில் கொடி மரத்தை ஒளித்தவன் தனது சொந்தப் பிரச்சனைக்காக, தனிப்பட்ட பகைக்காக கொடி மரத்தை ஒளிக்கவில்லை. அவனிற்கு அந்தக் கோயிலில் திருவிழா செய்யும் மற்றவர்கள் எவருடனும் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஏனெனில் அவர்கள் எல்லோரும் வெள்ளாளர்கள். அவன் கொடி மரத்தை ஒளித்ததிற்கு ஒரே ஒரு காரணம்தான் அது வெள்ளாள சாதிவெறி. திருகோணமலை நகரசபைக்காரனிற்கு துப்பரவுத் தொழிலாளர்கள் மனிதர்கள் இல்லை. கொடி மரக்கள்ளனிற்கு சலவைத் தொழிலாளர்கள் மனிதர்கள் இல்லை.

இவை எல்லாம் இந்த சுத்த சன்மார்க்க உத்தம புத்திரர்களிற்கு தெரியவில்லையாம். அவர்கள் சொல்கிறார்கள் நீங்கள் பிரச்சனைகளைப்பற்றி பேசினால் அது இலங்கை அரசிற்கு சாதகமாக போய்விடும். பிறகு தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் ஆணையை புடுங்க முடியாமல் போய்விடுமாம். இன்றுவரைக்கும் அந்த தொழிலாளர்களின் உரிமைகளிற்கான போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் மறுமொழி சொல்லவில்லை?. சாதிக்கொழுப்பில் தொழிலாளர்களை மனிதர்களாக மதிக்காத நகரசபை உறுப்பினரை ஏன் விசாரணை செய்யவில்லை?.

எண்பத்து மூன்று கலவரத்திற்கு பின்பு அராஜகம், ஜனநாயக மறுப்பு என்று தமிழ் மக்களின் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்ட ஆயுதங்களின்மேல் காதல் கொண்ட மன நோயாளிகளை கேள்விகள் கேட்ட ஜனநாயக, முற்போக்கு சக்திகளின் மீதும் இன்று போலவே அன்று, தமிழர்களின் ஒற்றுமையைக் குலைக்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். குரல்வளை நெரித்து கொலை செய்தார்கள். முப்பதுவருடங்களும் மூச்சடங்கிய மனிதர்களுமாக தமிழ்மக்களின் வாழ்வு இருண்டு போனது. வறுமை, இன ஒடுக்குமுறை, சாதி, சமயம், பிரதேசவாதம் என மக்களை அடிமைப்படுத்தும் எல்லாவித ஒடுக்குமுறைகளிற்கும் எதிராக ஒடுக்கப்படும் எல்லாமக்களுடனும் இணைந்து போராடுவோம். வெங்கொடுமைச் சாக்காடாய் வீற்றிருந்த சாதிப்பொய்களும், புனைவுகளும் போராட்ட நெருப்பில் எரிந்து சாம்பலாகும்.



படிப்பகம்

# இயற்கை மற்றும் மறுசுழற்சி பற்றிய அறிவு குறித்து!

**இ**யற்கை அழிப்பு என்பது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவா? வேலைவாய்ப்பை கொடுப்பதற்காகவா? அரசுகள் தமது பொருளாதாரக் கொள்கையின் நோக்கம் இதுதான் என்று கூறுகின்ற நிலையில், இயற்கையான சூழலை உயிரினங்கள் இழந்து வருகின்றது. மறுபுறம் அரசுகள் கூறுவது போல், இதுவொரு உண்மையா!?

இன்று உயிர்வாழ்வதற்கான இயற்கையான சூழலை அழித்து வருவது பற்றி பொதுவாக உணரப்படுகின்றது. இயற்கையை அழித்து உயிரற்றதாக்கும் பொருள் உற்பத்தியானது, இயற்கை பற்றியும், சுற்றுச்சூழல் பற்றியும் மனிதனைப் பேச வைக்கின்றது. அரசுகள், தாம் இயற்கை அழிக்கவில்லை, நாட்டினதும் மக்களினதும் "பொருளாதார வளர்ச்சியாகவும்", "மக்களுக்கான வேலைவாய்ப்பாகவும்" இதை முன்னெடுப்பதாகக கூறிக்கொள்கின்றது. மக்கள் – அரசு இயற்கை பற்றி கொண்டுள்ள கொள்கைகள் முரண்பாடற்றதாக பயணிப்பதும், எஞ்சியுள்ள காடுகள், குளங்கள், ஆறுகளை... என அனைத்தையும் மூலதனம் அழிக்க முற்பட்டு இருப்பதைக் காண்கின்றோம்.

மக்களுக்கான பொதுநன்மையின் பெயரில் மூடிமறைக்கப்பட்ட பற்பல காரணங்களை முன்வைத்து, இயற்கையை வேகமாக சூறையாடுவதும், சுற்றுச்சூழலை நஞ்சிடுவதும் தொடர்ந்து நடந்தேறுகின்றது. அதேநேரம் மறுசுழற்சி பற்றியும் பேசப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் பல ஆயிரம் வருடம் ஆயுள் கொண்ட பழமையான காடுகள் அழிக்கப்படுகின்றது. நிலத்தடி நீர் உறிஞ்சப்படுகின்றது. அழிவுக்குள் சிக்காத ஆழ் கிராமங்கள் முதல் நாடுகள் வரை, எதையும் உலகமயமாக்கல் பொருளாதாரம் இன்று உயிருடன் விட்டு வைக்கவில்லை.







செயற்கையான மறுசுழற்சிக் கொள்கையானது, உயிருள்ள இயற்கையான மறுசுழற்சி அழித்து விடுவதைதர்க்கரீதியாகநியாயப்படுத்தி விடுகின்றது. அதாவது உயிரற்ற கழிவுளைக் கொண்ட சூழல் பாதுகாப்பு என்ற சுயவிசாரணையற்ற பிரமைகள் உருவாக்கப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் பொருள் நுகர்வதற்கு வந்தவுடன், அதன் பயன்பாட்டுக்குரிய ஆயுளை அழித்து விடுவதே, இன்றைய பொருளாதார வளர்ச்சியாக மாறி வருகின்றது. பொருள் சந்தையில் தேங்குவது மட்டுமல்ல, பொருள் மக்களின் பயன்பாட்டில் நீடித்த ஆயுளைக் கொண்டு இருப்பது கூட, பொருளாதார வளர்ச்சிக்கு எதிரானதாக மூலதனம் கருதுகின்றது. பொருளின் பயன்பாட்டு ஆயுளை அழிக்கும் வண்ணம், மனிதப் பண்பாட்டை மூலதனம் உற்பத்தி செய்கின்றது. இதன் மூலம் பொருளை கழிவாக்குவதே, உற்பத்தியின் நோக்கமாக மாற்றி இருக்கின்றது. பொருளின் பயன்பாட்டு அழிவை மறுசுழற்சியாகவும், சுற்றுச்சூழல் பிரச்சனைக்கான தீர்வெனவும் முன்வைக்கப்படுகின்றது.

உற்பத்தி தொடங்கி மறுசுழற்சி வரையான செயல்கள் மூலம் வெளியேறும் வாயுக்களால், பூமியின் வெப்பநிலை அதிகரிப்பது பற்றியும் பேசுகின்றான். பனிப்பாறைகள் உருகுவதும், கடல் நீர்மட்டம் அதிகரிப்பது பற்றியும் பேசுகின்றான். அணுவுலைகளின் கழிவுகள் நிலத்திலும் கடலிலும் புதைக்கப்படுவது பற்றியும் பேசுகின்றான். அணுவிபத்துகள் உயிரினங்கள் வாழமுடியாத பிரதேசத்தையே உருவாக்குவது பற்றியும் பேசுகின்றான். இப்படி இயற்கையை அழிக்கும் மூலதனமே இதைப் பேசுவதன் மூலம், உண்மையில் மக்களின் சிந்தனை முறையை தனது வரம்புக்குள் அணுகி, தனக்கு ஏற்றவாறு சிந்திக்கத் தூண்டுகின்றான்.

இந்தப் பொதுக் கண்ணோட்டத்தில் சுற்றுச்சூழல் கட்சிகள் உருவாகி வருவதுடன், ஆட்சிகளில் கூட பங்கேற்கின்றன. சுற்றுச்சூழலை கட்டுக்குள் கொண்டு வர சர்வதேச தன்னார்வ மாநாடுகள் வரை நடக்கின்றது. சூழல் சார்ந்து சில மாற்றங்கள், நடைமுறைகள் கொண்டு வரப்படுகின்றது.

இப்படி மூலதனம் தனது புண்ணுக்கு தானே மருந்து போடுகின்ற காட்சிகள் அரங்கேறுகின்றது. இதன் மூலம் புண்ணை உருவாக்கும் காரணத்தை மூடிமறைத்து, அதை பாதுகாக்க முனைகின்றான். அதாவது சுற்றுச்சூழல் பற்றிய மனிதனின் சுயாதீனமான செயலை கட்டுப்படுத்த, சுற்றுச்சூழலை அழிப்பவன் தனக்கு அமைவான தீர்வை முன்வைக்கின்றான். அது இன்று சுற்றுச்சூழல் பற்றிய பொது அறிவாகி, மறுசுழற்சி பற்றிய பிரமையை உருவாக்கி இருக்கின்றது.

மறுசுழற்சி சுற்றுச்சூழலை அழிக்கின்றதை தடுக்கின்றதா? சுற்றுச்சூழலை அழிக்கும் காரணத்தை மாற்றுகின்றதா? இன்று சுற்றச்சூழல் பற்றிய பொது அறிவு, சூழலைப் பாதுகாக்கின்றதா?

## சுற்றுச்சூழல் அழிவை புரிந்து கொள்ளுதல்....

உதாரணமாக உலகமயதாதலில் வாழும் கைக்குழந்தைகளை எடுங்கள். குழந்தைக்கு ஒரு பொருளை வாங்கிக் கொடுக்கும் அதேகணத்தில், குழந்தை அதன் பயன்பாட்டை முடித்துக் கொண்டு தூக்கி எறிவதையும், புதிய பொருளைக் கோருவதையும் அனுபவரீதியாக இன்று காண முடிகின்றது. அதேநேரம் குழந்தை தொலைக்காட்சியில் காட்டும் புதிய பொருளையோ, கடை அங்காடிகளின் காணும் ஒரு பொருளைக் கோருவதையும், அதை அடிக்கடி மாற்றுவதையும் வாழ்க்கையில் சந்திந்திக்கிறோம். இங்கு கைக்குழந்தையே, பொருள் பயன்பாடு பற்றிய ஒரு பொது உலகக் கண்ணோட்டத்தை பெற்று விடுகின்ற வாழ்க்கைச் சூழல் மட்டுமின்றி, அந்தக் குழந்தை தூக்கி எறியும் பொருள் அந்தக் கணமே பயனற்ற வீட்டுக் குப்பையாக அல்லது வீசியெறியும் கழிவாக அல்லது மறுசுழற்சிக்குச் செல்லும் பயனற்ற பொருளாகி விடுவதைக் காணமுடியும்.

இவை கூட ஒரே மாதிரி நிகழ்வதில்லை. குழந்தை தொடர்பு கொண்டு உள்ள சூழலுக்கு ஏற்ப, இது வேறுபடுவதை அவதானிக்க முடியும். கைக்குழந்தையே வாழ்க்கைச் சூழலின் கைதியாகி, சூழலை அழிக்கும் வாழ்க்கைக்குள் எப்படி செயற்படுகின்றது என்பதை இலகுவாக புரிந்து கொள்ள இது உதவுகின்றது.

எமது குழந்தைப் பருவம் அல்லது நாம் சந்தித்த வெவ்வேறுபட்ட குழந்தைப் பருவங்களுக்கு முரணான இந்தச் செயல், எதனால் எப்படி குழந்தைக்குள் நடக்கின்றது?

இதை மேலும் புரிந்துகொள்ள எம்மவர்களின் வாழ்க்கை முறையில், குறிப்பாக பெண்களின் நுகர்வில் இதை எடுப்பாகவும் இலகுவாகவும் அவதானிக்க முடியும். இன்று ஒரு விழாவுக்கு செல்வதாயின் புதிய சாறியும், அதற்கு அமைவான அனைத்து அணிகலன்களும் வாங்குவது எமது விழாப் பண்பாடாக மாறி இருக்கின்றது. இங்கு புதிதாகவும், விதவிதமாகவும் அணிவதும், அதுவும் திருப்தியற்ற ஒன்றாக மாறி இருப்பதும், இறுதியில் அந்த விழாவுக்கு பின் குறித்த பொருட்கள் பயன்பாடற்ற கழிவாக கழிப்பதை இன்று காணமுடியும். எமது கடந்த வாழ்க்கை அனுபவத்தில் நடக்காதது, இன்று எமது வாழ்க்கையில் எப்படிச் சாத்தியமானது?

**தொடர்ச்சி பக்கம் – 15 இல்**




**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# 19ஆவது திருத்தமும் ஏமாற்றப்பட்ட மக்களும்!

நாட்டு மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 19ஆவது அரசமைப்பு திருத்தம் 174 திருத்தங்களின் பின்பதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் ஆலோசனைக்கு ஏற்ப பலசரத்துகளை நீக்கவேண்டிய கட்டாயத்திற்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருந்தது. இது அரசாங்கத்திற்கும் ஐ.தே.கட்சிக்கும் பின்னடைவாகவே கருதவேண்டும். அதேவேளை ஐ.ம.சு, கூட்டமைப்பு சார்பில் பெருமளவிலான திருத்தங்கள் முன்மொழியப்பட்டது. இந்தநிலையில்தான் சிலர்





19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அரசியலமைப்பு புரட்சியாக சித்தரிப்பதை காணக்கூடியதாக உள்ளது. வேறுசிலர் 19ஆவது திருத்தத்தை சிங்களவர்களின் மரணசாஸனமாக சித்தரிக்கின்றனர். உண்மையில் சாதாரண மக்களுக்கு இவை தொடர்பாக சரியான தெளிவில்லை. எனவே 19ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாகும்.

எது எவ்வாறாயினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கு நாட்டுமக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு காணப்படுகிறது. அனேகமானோர் 19ஆவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும் அல்லது ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளதா? 1972 அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி அரச தலைவராகும். 1978 அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசதலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும், அமைச்சரவையின் தலைவராகவும், முப்படைகளின் தளபதியுமாவார். இது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் சிறப்பம்சமாகும். எதிர்பார்த்ததைப்போல் 19ஆவது திருத்தத்தின் மூலமும் மேற்படி அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறைவேற்று அதிகாரத்திற்கு எத்தகைய பாதிப்புமில்லை என்பதை விளங்கிக்கொள்ள முடியும். அடுத்ததாக 19ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பார்ப்போம்.

அநேகரின் எதிர்பார்ப்பு ஜனாதிபதிவசம் இருக்கும் அரசாங்கம் மற்றும் அமைச்சரவை தலைமைப்பதவி தொடர்பிலான திருத்தமாகும். இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விடயமானது ஜனாதிபதியின் சர்வாதிகார அதிகாரம் ஒழிக்கப்பட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பதில்சொல்ல வேண்டியவராக இருக்க வேண்டும் என்பதாகும். இது நடந்திருக்கிறதா என ஆராய்ந்தால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரம் அப்படியே இருக்கிறது. சுருங்கக்கூறின் பிரதமர் பிரதமரின் செயலாளரை நியமித்தல், அமைச்சர்கள் அமைச்சர்களின் செயலாளர்களை நியமித்தல், அமைச்சர்களுக்குரிய பொறுப்புகளை தீர்மானித்தல், பாராளுமன்றத்தை கூட்டுதல், பாராளுமன்றத்தை இடைநிறுத்திவைத்தல், பாராளுமன்றத்தை கலைத்தல் ஆகிய அதிகாரங்கள் 1978 அரசியலமைப்பின் உள்ளபடியே 19ஆவது திருத்தத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியானவர் அமைச்சர்களின் பொறுப்புகளில் மாற்றம் செய்தல், அமைச்சர்களை மாற்றுதல் ஆகியவையும் ஜனாதிபதியின் அதிகாரத்துள் அடங்கும். ஜனாதிபதியானவர் விரும்பினால் அமைச்சர்களின் எண்ணிக்கை அவர்களுக்கு வழங்கும் பொறுப்புகள் அவற்றை செயற்படுத்தும் முறை ஆகியவற்றில் பிரதமரின் ஆலோசனையை பெறலாம், இது கட்டாயமல்ல. ஆக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை 19ஆவது திருத்தசட்டம் மட்டுபபடுத்தவில்லை என்பதே உண்மை.

19ஆவது திருத்தத்தில் முக்கியத்துவம் வாய்ந்த திருத்தமாக கருதக்கூடியது கடந்த அரசாங்கம் நிறைவேற்றிய 18ஆவது திருத்தத்தை ரத்துசெய்ததுடன் செயலிழக்க செய்யப்பட்ட 17ஆவது திருத்தத்தின் மூலம் நடைமுறையில் இருந்த சுதந்திர ஆணைக்குழுக்களான தேர்தல் ஆணைக்குழு, பகிரங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, மனிதஉரிமை ஆணைக்குழு போன்ற முக்கிய ஆணைக்குழுக்களை சுதந்திரமாக செயற்பட வகைசெய்துள்ளது. தேர்தல் ஆணைக்குழு, பகிரங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு போன்றவற்றின் தவிசாளர்களையும், அங்கத்தவர்களையும் பாராளுமன்ற சபையின் அங்கீகாரமின்றி ஜனாதிபதியால் நியமிக்க முடியாது.

பாராளுமன்ற சபையானது பிரதமர், சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒருவர், பிரதமராலும் எதிர்க்கட்சி தலைவராலும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐவர், பாராளுமன்றத்திலுள்ள ஏனைய கட்சிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவர். ஆகியோர் அடங்குவர். சுருங்கக்கூறின் 17ஆவது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு 18ஆவது திருத்தத்தால் காலாவதியாக்கப்பட்டவை தேவையான மாற்றங்களுடன் மீளவும் அமுல்செய்யப்பட்டுளது. அடுத்ததாக 1978 அரசியலமைப்புக்கிணங்க ஜனாதிபதியின் பதவிக்காலம் இரண்டு தடவைகள் என மட்டுபடுத்தப்பட்டிருந்தது. இது மீளவும் 19ஆவது திருத்தத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆறுவருடங்களாக இருந்த ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டமூலம் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 30ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தேசியஅரசு அமையும் பட்சத்தில் அமைச்சரவை எண்ணிக்கை மாறலாம். ஜனாதிபதி பதவிவகிக்கும் காலத்தில் அவரால் இழைக்கப்பட்டதாக கருதப்படும் சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பில் 1978 அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளதையே 19ஆவது சரத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளது. அதேவேளை ஜனாதிபதி தனது பதவியின் தகைமையில் செய்த ஒரு செயலால் பாதிக்கப்பட்ட ஒருவர் அதற்கெதிராக சட்டமாஅதிபருக்கு எதிராக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் வழக்கு தொடர்வதற்கான உரிமை 19ஆவது திருத்தம் வழங்குகிறது. தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுதல் போன்ற மக்களின் ஜனநாயக உரிமைகள் 19ஆவது திருத்தத்தின் மூலம் உறுதிசெய்யப்படவில்லை.

உண்மையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ரத்துசெய்ய வேண்டும் என்ற நோக்கம் இருந்தால், அது சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலமே அது சாத்தியமாகும். பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டுபங்கு பலத்தினால் மட்டும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்கிவிட முடியாது என்பதை உயர்நீதிமன்றம் வழங்கிய ஆலோசனை உறுதி செய்துள்ளது. இது 1978 அரசியலமைப்பு தொடர்பில் தெளிவுள்ளவர்கள் அறிந்த விடயமாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி வசமிருக்கும் மிதமிஞ்சிய அதிகாரங்களை ரத்துசெய்து பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட 19ஆவது திருத்த சட்டமூலத்தில் ஊடகசுதந்திரத்துக்கு அச்சுறுத்தலான சரத்து சேர்க்கப்பட்டிருந்தது. இந்த சரத்து ஊடகத்துறை சார்ந்தோர் மற்றும் எதிர்கட்சியினரினதும் கடுமையான எதிர்ப்பினாலும் ஊடகத்துறைக்கு அச்சுறுத்தலான சரத்தை அரசாங்கம் வாபஸ்பெற வேண்டியதாயிற்று. அதேபோல் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் குறிப்பிட்ட சிலவற்றை பிரதமருக்கு மாற்றும் சரத்துக்களை அமுல்படுத்துவதானால் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என உயர்நீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ளது. 19ஆவது திருத்தத்தை தயாரித்த அரசியலமைப்பு சட்டவல்லுனர்களுக்கு தெரியாமல் போனது ஆச்சரியம்தான். இந்த விடயங்களை கிஞ்சித்தும் கவனத்தில் கொள்ளாமல் 19ஆவது திருத்தத்திற்கு



ஆதரவு வழங்கக்கோரி பாரிய போராட்டங்களை முன்னெடுத்திருந்தமையானது 19ஆவது திருத்த சட்டமூலத்தின் நோக்கத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.



படிப்பகம்

# புலம்பெயர் பெண்களின் பிரச்சனைகளும் சமூகவியல் காரணிகளும்

யுத்தம் சார்ந்த புலம்பெயர்வின் 30–35 வருட காலங்களை கடந்தவர்களாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆண்களின் புலம் பெயர்வை தொடர்ந்து அவர்களின் குடும்பங்களை அமைப்பதற்காகவும் நாட்டில் குடும்பமாக



வாழ்ந்தவர்களின் பெண்களும் என ஆரம்பத்தில் பெண்களின் புலம்பெயர்வு அமைந்தது. அன்றிலிருந்து இன்றுவரை யுத்தசூழலின் பாதிப்புகளுடன் தான் பெண்கள் புலம்பெயர்ந்துள்ளனர். யுத்தத்தின் நேரடியான பாதிப்புக்கள், வன்முறைகள் என்பன குழந்தைகளையும் பெண்களையுமே அதிகளவு பாதிக்கின்றது என்பது பொதுவான உலகளாவிய யதார்த்தம். அதனால் அதிகமான பெண்கள் யுத்தத்தினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்புக்களை சந்தித்தவர்களாவே இருக்கின்றனர்.

இந்த முதலாளித்துவ நாடுகளில் பொருளாதாரரீதியான இயங்குதலுக்கும் சமூகரீதியான இயங்குதலுக்கும் பெண்கள் ஈடுகொடுக்க வேண்டுமானால் குடுப்பத்திற்குள் ஜனநாயகரீதியான அசைவுகளும் மாற்றங்களும் எமது குடும்பங்களில் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த மாற்றம் என்பது இந்தப் பெண் சார்ந்த, அவளிற்குள் இருக்கும் சமூகரீதியான மனிசியையும், உடல்ரீதியான மனிசியையும், உளவியல்ரீதியான மனிசியையும் கண்டுகொள்கின்ற இடமாக குடும்பம் மாறியிருக்க வேண்டும்.

இந்த மூன்று வகையிலும் கவனிக்கப்படாமல் விடப்படும் போதும் போர்ச்சூழலினால் ஏற்பட்ட பாதிப்புகளும் இணைந்து, உளவியல்ரீதியான பாதிப்புகளை அவளில் ஏற்படுத்துகிறது. இது சார்ந்த எவ்வித பிரக்ஞையும் எமது சமுதாயத்தில் இருப்பதாக தெரியவில்லை. இதுபற்றிய சிறிதளவான பிரக்ஞையை ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதலாளித்துவ நாடுகளான வடஅமெரிக்க, ஐரோப்பிய, ஸ்கன்டிநேவிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வந்து வாழ்ந்துகொண்டிருந்தாலும் இலங்கையில் வாழ்ந்த அதே கட்டுமானத்தையும் உள்ளடக்கங்களையும் நடத்தைகளையும் கொண்டவர்களாகவே பெரும்பான்மை ஆண்களும் பெண்களும் வாழ்கின்றனர். குடும்பப் பொறுப்புகளான எல்லா வீட்டுவேலைகளையும் செய்தல், பிள்ளைகளை பராமரித்தல், என எவ்வாறு ஊரில் அம்மா செய்தாளோ அது போலவே இங்கும் பெண்ணிற்கு கொடுக்கப்படுகிறது. கணிப்பிற்குள் எட்டாதளவான சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதும் மறுப்பதற்கில்லை. ஆனாலும், இன்னும் பல குடும்பங்களில் வேலையிலிருந்து வரும் ஆணிற்கு சாப்பாடு போட்டு கொடுக்கும் கலாச்சாரமே பின்பற்றப்படுகிறது.

பெண்களும் கலாச்சாரமுறையில் பிள்ளைகள் வளர்த்தல் என்ற குறிக்கோளை கொண்டவர்களாக பெண்பிள்ளைகளின் பாலியல் தூய்மை பற்றிய கருத்தும் அது சார்ந்த கடுமையான கண்டிப்பு அல்லது ஒடுக்குமுறை கொண்டவர்களாகவுமே காணப்படுகின்றனர். அதேவேளை ஆண்பிள்ளைகளின் நடத்தை சார்ந்தும் அது சார்ந்து அவர்கள் நடாத்துகின்ற அதிகாரங்கள் சார்ந்தும் கவனிப்பதில்லை. இதனால் பெண்பிள்ளைகளுக்கு அடித்தல் போன்ற வன்முறைகளும் குடும்பங்களுக்குள் நடைபெறுகின்றன. தமிழ் கலாச்சாரம் என பிள்ளைகளுக்கு சொல்லப்படுபவற்றுள் சில வீட்டிற்குள்ளேயே முரண்பட்டு விடுகின்றன. (உதாரணமாக சிகரட் புகைத்தல், மது அருந்துதல் போன்றவை.) வெளிச்சூழலில் ஜனநாயக சூழலை அறியும் பிள்ளைகளுக்கு, வீட்டிற்கும் வெளிச்சூழலுக்குமான முரண் ஏற்படுகிறது.



இந்த முரண்பாட்டிலும் பிள்ளை வளர்ப்பிற்கு பொறுப்பளிக்கும் பெண்ணே அல்லற்படுகிறாள்.

பெரும்பாலான பெண்கள் இங்கு ஆண்களுக்கு நிகராக வேலைக்கு சென்று பொருளாதார ரீதியில் பணமீட்டும் நிலையில் உள்ளனர். ஆய்வுகளும் இதனைச் சொல்கின்றன. அதாவது குடும்பப் பொறுப்பை சுமப்பவளாகவும் அதேவேளை வேலைக்குச் சென்று பொருளாதாரத்தை ஈட்டுபவர்களாகவும் இரட்டைச் சுமையை கொண்டவர்களாகவே அதிக பெண்கள் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.



புலம்பெயர் நாடுகளில் குடும்பரீதியான நமது சமூதாயத்துடன்தான் அதிகம் நாம் தொடர்புகொண்டு வாழ்கின்றோம். தொழில்ரீதியாக மட்டுமே வேறு நாட்டவருடன் தொடர்பினை வைத்திருக்கிறோம். பெரும்பாலும் கலாச்சாரரீதியான விடயங்கள் பொழுதுபோக்கு வாழ்க்கை சார்ந்த உள்ளடக்கங்கள் எல்லாமே எமது சமுதாய நண்பர்கள், உறவினர்கள் என்கின்ற வட்டத்தையே வைத்திருக்கின்றோம். இதனால் மனிதர்களுக்கிடையிலான தொடர்பாடலின் உள்ளடக்கங்கள் மிகச் சிறியனவாகவே உள்ளன. நடைமுறை சார்ந்தும் சிந்தனை சார்ந்தும் நாம் வாழும் சமூகத்தினது நல்ல விடயங்களை தெரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. இதையே பிள்ளைகளிடமும் திணிக்கப்படுகிறது அல்லது எதிர்பார்க்கப்படுகிறது.

உறவுகளுடனோ நட்புகளுடனோ சேரும் போது பிள்ளைகளின் பெருமைகள் பற்றியதான விடயங்கள் சீலை பற்றியும், நகைகள் பற்றியும் அழகு பற்றியும் பெருமைக் கதைகள் கதைப்பதைத்தான் பார்க்கலாம். வாழ்க்கையை போட்டியாகப் பார்த்து மற்றவர்களின் வாழ்க்கையுடன் தனது வாழ்க்கையை ஒப்பிட்டு பார்க்கும் மனநிலை வாழ்வியல் செம்மைப்படுத்தலை தொலைத்துவிடுகிறது.

ஒரு பெண், தன் பாலியல்ரீதியான பிரச்சனை சார்ந்து தனது கணவனிடத்தில் மனம் திறந்து வெளிப்படையாக கதைக்க முடியாத தன்மைதான் உள்ளது. தன்னுடன் நெருங்கிய உறவு அல்லது தோழி என, பெண்களுக்கிடையில் கூட இந்த விடயம் கதைக்கப்படுவதில்லை. இது ஒரு கலாச்சாரத்திற்கு புறம்பான விடையமாக கருதுகிற சிந்தனைப்போக்கே எம் பெண்களிடம் உள்ளது. இந்த உரையாடல் தளம் விரிவுபடுத்தப்பட்டதாக இருத்தலே ஆரோக்கியமானது. இந்த வகையில் தான் பெண்பிள்ளைகளிடம் கூட நாம் பாலியல் சார்ந்த விடையங்களை அவர்களின் பிரச்சனைகளை கேட்பதற்கும் சொல்வதற்கும் தவறுகிறோம். 80, 90 களில் வந்தவர்களுக்கு இப்போது வளர்ந்த பிள்ளைகள் இருப்பதினால் இதனை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது.

தனது வாழ்க்கைமுறையில் சிக்கல்களை சந்திக்கும் பெண்களுக்கு மனப்பதட்டம் ஏற்படுகிறது. அது தொடருமானால் மன அழுத்தம் ஏற்படுகிறது. இதனால் உடல் நோய்களான தோள்பட்டைவலி, நித்திரையின்மை, உடல் தளர்ச்சி, மனச்சோர்வு, மாதவிடாயப் பிரச்சனை போன்றவை ஏற்படுகின்றன. இவற்றில் ஒன்றுடனோ சிலதுடனோ பெண்கள் தமது வாழ்க்கையை வாழ்கின்றனர். இவை ஏன் ஏற்படுகின்றன என்பதுபற்றி பலர் விளங்கிக் கொள்வதில்லை. இவற்றை உடல் சார்ந்த நோய்களாக கருதி வலிநிவாரணிகள் எடுப்பதன் மூலம் தற்காலிக தீர்வினை எட்டுகின்றனர். இவை கவனிக்கப்படாமல் விடப்படும்போது இவற்றின் தொடர்ச்சியாக உடல்ரீதியான கடுமையான வருத்தங்களான டையபட்டீஸ், இரத்த அழுத்தம், இருதய வருத்தம் போன்றவை ஏற்படுகின்றன.

முடிவாக, ஒப்பீட்டளவில் ஜனநாயக அடிப்படையிலும், பெண்களுக்கான உரிமைகளின் அடிப்படையிலும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு நாம் புலம் பெயர்ந்தாலும், தொடர்ந்தும் படுபிற்போக்கான ஒடுக்குமுறைகளைப் பெண்கள் மீது பிரயோகித்து வருகிறது புலம்பெயர் சமூகம். இவ்வொடுக்குமுறைகள், பல உடல்–உள பாதிப்புகளை பெண்களுக்கு ஏற்படுத்தி, அவர்களின் ஒட்டுமொத்த வாழ்வையும் சீரழிக்கும் நிலை உச்சமடைந்துள்ளது. அத்துடன், இங்கு புகலிடத்தில் பிறந்து வளர்ந்துவரும் எமது இரண்டாவது பரம்பரைப் பெண்கள் மீது இவ்வொடுக்குமுறைகள் மிக உக்கிரமாகப் பிரயோகிக்கப்படுகிறது.

இந்நிலையை ஓரளவுக்கேனும் சீர் செய்வதானால் பெண்ணுரிமைகள் பற்றிய வெளிப்படையான விவாதமும், போராட்டத் தளங்களும் திறக்கப்படல் வேண்டும்.



படிப்பகம்

# பிச்சா பாத்திரம் ஏந்தும் தமிழ் அரசியல் பிறவிகள்



இலங்கையின் இன முரண்பாடு பற்றியும் அதனைத் தீர்த்து வைக்கும் வழிவகைகளை ஆராய்வது தொடர்பாகவும் நீதி நியாயத்துடன் அணுகும் எவரும் அதன் வட பகுதியில் 1920–1930 களில் ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் முன்னெடுப்புடன் மிகவும் தீவிரத்துடனும் துணிச்சலுடனும் செயற்பட்ட "யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்" பற்றி நிச்சயம் அறிந்தே ஆகவேண்டும். அப்போதுதான் இன்றைய இலங்கையின் இனப் பிரச்சனையின் உண்மையான தாற்பரியத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

1920களில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கிலத்தில் கல்வி கற்ற இளைஞர்கள் சிலர் ஹண்டி பேரின்பநாயகத்தின் முன்னெடுப்பில் கூடி விவாதங்களை நடாத்தி வந்தனர். இந்திய சுதந்திரப் போராட்டமும் மகாத்மா காந்தியின் போதனைகளும் இவர்களை கவர்ந்திழுத்திருந்தின. இதன் பின்னணியிலேயே அவர்கள் இலங்கையின் சுதந்திரத்தையும் அதற்கான போராட்டத்தையும் பற்றி சிந்தித்தனர்.

1919ல் கறுவாக்காட்டுத் தமிழ் தலைவர்கள் கொழும்பில் கூடி சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து "இலங்கைத் தேசிய காங்கிரஸை" உருவாக்கிய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி உரையாடிய இளைஞர்கள் இலங்கையின் சுதந்திரம் என்பதன் அடிப்படை–அத்திவாரம் "இலங்கையர் – அவர்களின் தாய்மொழிக் கல்வி – வேறுபாடுகள் பாகுபாடுகள் இல்லாத சமுதாயம்–நாட்டின் சுய பொருளாதார அபிவிருத்தி" என்ற கோட்பாடுகளுடன் அமையவேண்டும் என முடிவு செய்ததின் விளைவே பின்னாட்களில் 1920ல் "மாணவர் காங்கிரஸ் யாழ்ப்பாணம்" என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 1924 டிசெம்பர் 29, 30, 31ம் திகதிகளில் இடம் பெற்ற அதன் முதலாவது ஆரம்ப மாநாடாகும்.

இலங்கையின் வரலாற்றில் இலங்கையரின் சுதந்திரம் அந்நாட்டு மக்களால் கட்டியமைக்கப்படல் வேண்டும் என்ற இலக்குடன் செயற்படத் தொடங்கிய முதலாவது இளைஞர் அமைப்பு இது ஒன்றேயாகும். இன – மத – சாதி – சமய – பால் – பிராந்திய பாகுபாடுகள் இல்லாத மக்கள் சமூகம் என்பதனை அவர்கள் தங்கள் கொள்கைத் திட்டமாக முன்வைத்துச் செயற்பட்டனர். இதற்கான முன் நிபந்தனையாக வேறுபாடுகள் களையப்பட்டு இலங்கைக் குடிமக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பதனை வலியுறுத்தி மிகத் தீவிரமாக உழைத்தனர். தாய் மொழியின் அத்தியாவசியம்–சாதி அடக்குமுறை––பெண் அடிமைத்தனம்–உழைப்பாளர் உரிமைகள்–தன்னிறைவுப் பொருளாதாரம்––இன–மத ஐக்கியம் என்பவை பற்றிய விவாதங்களை அனைத்து மொழி சார்ந்த பிரமுகர்களையும் சந்திக்க வைத்துக் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நடாத்தினார்கள். "கேட்டு வாங்குவதல்ல சுதந்திரம்" என்பதனை அவர்கள் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தார்கள். ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளரின் ஆணைக் குழுக்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்நாட்களில் மரண தண்டனைக்குரியதாக அறிவிக்கப்பட்டிருந்த விடயங்களைக் கூட இரகசியக் கூட்டங்கள் நடாத்தி அலசி ஆராய்ந்தார்கள். மகாத்மா காந்தியை யாழ்ப்பாணம் வரை அழைத்து வந்தவர்கள் இந்த மாணவர் காங்கிரஸ் இளைஞர்களேயாகும்.

இதேவேளை கொழும்பில் வெள்ளையர்களின் நாகரீகத்தில் திளைத்திருந்த தமிழ்–சிங்கள மேட்டுக் குடித் தலைவர்கள் ஆங்கிலேயரின் ஆணைக் குழுக்களுக்கு ஆலவட்டம் வீசிக் கொண்டிருந்தனர். சுதந்திரப் பிச்சை போடும்படி ஆங்கில ஆட்சியாளர்களிடம் கெஞ்சிக் கொண்டிருந்தனர். 1927 நவம்பர் 13ம் நாளில் கொழும்பில் மேட்டுக் குடிகள் டொனமூர் ஆணைக் குழுவை வரவேற்கையில் காங்கிரஸ் இளைஞர்கள் காந்தியை வரவேற்றுக் கொண்டிருந்தனர்.

இந்த மேட்டுக் குடிக் கனவான்கள் ஆங்கிலேயரிடம் நாட்டுமக்களைக் கட்டியாளும் சுதந்திரத்தைத் தங்களிடம் தா என்றுதான் கேட்டார்களே தவிர நாட்டு மக்களின் சுதந்திரத்தை அல்ல. அதுவே ஆங்கிலேயரின் பிரித்தாளும் தந்திரோபாயத்தின் கீழ் சிங்கள–தமிழ் கனவான்களுக் கிடையில் பங்குச் சண்டையாகி பின்னர் இனவாதமாக இரு பகுதியினராலும் வளர்த்தெடுக்கப்பட்டது.

1944ல் சிங்களக் கனவான்களை விட்டுப் பிரிந்து வந்து தமிழ் கனவான்கள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தொடங்கினார்கள். அன்று 50க்கு 50 தா என ஆங்கிலேயரிடம் கேட்கத் தொடங்கிய ¬(அதிகாரப்) பிச்சை" இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை ஓயவேயில்லை.

வருடா வருடம் மாநாடுகளை நடாத்தி மக்களுக்கு




அரசியல் அறிவூட்டி அவர்களை அணி திரட்டி வந்த மாணவர் காங்கிரஸ் "யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ்" என மாற்றம் பெற்றது. 1931ல் இலங்கையில் முதன் முறையாக சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டுப் பொதுத் தேர்தல் நடைபெற இருந்த காலப்பகுதியில் 1931 ஏப்ரல் 23, 24, 25ம் திகதிகளில் காங்கிரஸ் அதனது 7வது அமர்வை நடாத்தியது. "சுதந்திரம் என்பது வெள்ளையனை வெளியேற்றி அதிகாரத்தினை சக்திவாய்ந்த ஒரு சிறு கும்பலிடமிருந்து அதற்கு சமனான கொடுங்கோல் கும்பல் ஒன்றின் கைக்கு மாற்றப்படும் விடயமல்ல" என்பது இம் மாநாட்டில் வைக்கப்பட்ட கருத்துக்களில் ஒன்றாகும்.

சுதந்திரம் என்பது இலங்கையில் வாழும் அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமை என்ற கோட்பாட்டின் கீழ் செயற்பட்ட காங்கிரஸ் அத் தேர்தலை பகிஷ்கரித்தது.ஆனால் ஆளும் அதிகாரம் கேட்டு ஆக்கிரமிப்பாளரைக் கெஞ்சியபடி இருந்த மேட்டுக் குடிகள் இன மத சாதி பிராந்திய உணர்வுகளைத் தூ ண்டி பதவிகள் பட்டங்கள் பவிசுகளைக் காட்டி மக்களை மயக்கி காங்கிரஸைக் காலப் போக்கில் காணாமல் போகச் செய்துவிட்டனர். 1931லிருந்து அரச சபை உறுப்பினர்கள் ஆகி ஆங்கிலேயரின் கருணையை எதிர்பார்த்த தமிழ்க் கனவான்கள் 1948லிருந்து சிங்கள மேலாதிக்க வாத ஆட்சியாளரிடம் தமிழ் மக்களை ஆளும் உரிமைக்காக பேரம் பேசும் அரசியலைத் தொடருகிறார்கள்.

இந்த பேரம் பேசும் அரசியலுக்கு ஆதரவுப் பிச்சை கேட்டு இவர்கள் இந்த பூமிப் பந்தில் கால் பதிக்காத நாடுகளுமில்லை. சந்திக்காத நாட்டுத் தலைவர்களுமில்லை.

சுதந்திரம் என்பது நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் உரித்துடையது. இதனை பெரும்பான்மை சிறுபான்மை ஜனநாயகமோ அல்லது பாரம்பரிய வழக்கங்களோ அல்லது மதத் தத்துவங்களோ அல்லது ஆளும் அதிகாரங்களோ தடுக்கமுடியாது. இதனை மக்களுக்குப் புரிய வைத்து அந்த மக்களின் மானசீக ஈடுபாட்டுடனும் அவர்களின் தன்னம்பிக்கையுடனும் ஒருமைப்பாட்டுடனும் ஓரணியாகத் திரண்டெழுந்து போராடுவதன் ஊடாகவே அவர்களுக்கான உரிமைகளை நிலைநிறுத்த முடியும்.

நாட்டில் கலவரங்கள் இடம்பெற்ற ஒவ்வொரு தடவையும் நமது தலைமைகள் தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் விண்ணப்பம் செய்தார்கள். ஐக்கியநாடுகள் சபைக்கு மனு அனுப்பினார்கள். சர்வதேச யுத்த விதிகளையும் மீறி சிங்களப் பேரினவாத அரசு அண்டை–அயல்–சர்வதேச நாடுகளின் பரிபூரண–மானசீக ஆதரவுடன் 2009ல் தமிழ் மக்களை அழித்தொழித்து எஞ்சிய மக்களை அவர்களது பாரம்பரிய–சொந்த மண்ணிலே சிறைக் கைதிகளாக்கி அனாதைகளாக்கியது.

ஐ.நா.செயலாளர் பாங்கி மூன் வந்தார். முறையிட்டழுதார்கள் நம்ம தமிழ் பிரதிநிதிகள். நவநீதம் பிள்ளையைக் கூட்டிச் சென்று ஒப்பாரி வைத்தார்கள். பிரிட்டிஷ் பிரதமரிடம் தங்களைக் காப்பாற்றும்படி கேட்டார்கள். நாளும் பொழுதும் கொழும்பிலிருந்து யாழ் வரும் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள். நாட்டுக்கு வருகை தரும் ஒவ்வொரு ராஜதந்திரிகளையும் தவறவிடாமல் சந்தித்துப் பேசுகிறார்கள். இவர்கள் இரந்து கேட்பது மக்களை ஆளும் அதிகாரப் பிச்சை. அவர்கள் "நீங்கள் ஒன்றுபட்டு நின்று ஒரே கோரிக்கை வையுங்கள்" என்று கூறுகிறார்கள். இவர்களோ "தனக்கு மூக்கறுபட்டாலும் பரவாயில்லை. எதிராளிக்கு சகுனப்பிழை" ஆகவேண்டும் என அடம் பிடிக்கிறார்கள்.

திரு மோடி பிரதமரானவுடன் புதுடில்லிக்குப் படையெடுத்தார்கள். அவர் "உங்கள் சகோதர இன மக்களுடனும் உரையாடுங்கள்" என அறிவுறுத்தினார். திரும்பி வந்து "இதுவரை சிங்கள மக்களுடன் பேசாமல் விட்டது தங்களது தவறுதான்" என வருத்தம் தெரிவித்தனர். திரு மோடி யாழ் வருகை தந்தபோது "பதின்மூன்றை வாங்கித் தாருங்கள்" என இறைஞ்சினார்கள்.

ஆனால் இலங்கையின் அரசியல் போக்கை மாற்றக் கூடிய அடிப்படைச் சக்தியாக விளங்கும் சிங்கள மக்களுடன் உரையாடுவதை கடந்த 67 வருடங்களாக தவிர்த்துக் கொண்டே வருகிறார்கள். அதே சமயம் மக்களை ஆளும் அதிகாரப் போட்டியில் தங்களுக்கிடையே ஆளுக்கு ஆள் புடுங்குப்படும் எமது தமிழ் தலைமைகள் இலங்கையின் ஆட்சியாளர்களுடன் மட்டும் தொடர்ந்து பேசி வருகிறார்கள்.

இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்களுடைய அரசியலின் அடி நீரோட்டமாக அன்று முதல் இன்று வரை திகழும் ஆளும் மேலாதிக்க வாத சக்திகளின் பிரதிநிதிகளான இந்த தமிழ் அரசியல் பிறவிகள் மக்களின் பெயரால் தங்கள் கையில் பிச்சா பாத்திரம் ஏந்திப் பிழைப்பதை நிறுத்தி விட்டு இனிமேலாவது மக்களுடன் மக்களாக கை கோர்த்து நின்று இலங்கைக் குடிமக்களின் ஒன்றிணைந்த உரிமைப் போராட்டத்தின் பங்காளிகளாக ஆகவேண்டும்.

இலங்கையின் இனப் பிரச்சனையை தீர்க்கக் கூடிய அதற்கான சக்தியைக் கொண்ட ஒரேயொரு பொறிமுறை இந்நாட்டின் சாதாரண பாமர பாட்டாளி மக்களின் கூட்டமைப்பை நிறுவுவதேயாகும்.

இல்லையேல் இலங்கையரைச் சாட்டி ஏனையவர்கள் வயிறு வளர்ப்பதும் தொடரும். நம்ம தலைவர்களும் பிச்சா பாத்திரம் ஏந்திப் பிழைப்பதும் நடக்கும்.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

# ஆண்களால் தினம், தினம் கொல்லப்படும் வித்தியாக்கள் !!!



ஏன் எங்கேயும் எப்போதும் பெண் பலியாகிறாள்?. மன்னர்களின் நாடு பிடிக்கும் சண்டையில் பெண்கள் அடிமைகளாக்கப்பட்டனர். மதவெறிக்கலவரங்களில் முதலில் அவள் தான் தான் பலியாகிறாள். எழுபதுகளில் மக்கள் விடுதலை முன்னணியின் புரட்சியில் பங்கு கொண்டதால் பாலியல்வன்முறை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டாள் கதிர்காமத்து பிரேமாவதி மன்னம்பெரி. ஒரு இரவு முழுவதும் இலங்கையின் காவல்நாய்கள் அவளைச் சித்திரவதை செய்தன. மாணிக்ககங்கையில் அன்று ஓடியது அவளின் இரத்தம் தான். அந்த நிலையிலும் தனது சக தோழர்களை, தன்னுயிரான புரட்சியை அவள் காட்டிக் கொடுக்கவில்லை. அந்தக் கோழைகள் அவளை கதிர்காமத்து வீதி முழுக்க நடத்திச் சென்றார்கள். அந்த பயங்கரமான இரவில் இருட்டை மட்டுமே அவள் அணிந்திருந்தாள். பின்பு அந்தக் கோழைகள் அவளை இயந்திரத் துப்பாக்கியினாலே சுட்டுக் கொன்றார்கள். பிரேமாவதி மன்னம்பெரியின் வாழ்வு இருபத்திரண்டு வயதில் அந்த இருட்டிலே முடிந்து போனது.

இலங்கையின் இனக்கலவரங்களில் பச்சைப் பனைமரங்கள் பற்றி எரிந்த போர்களில் பெண்களும் சேர்ந்து எரிந்தார்கள். கரும்பச்சை சீருடை அணிந்தவர்களால் சிதைக்கப்பட்ட பெண்கள் வாழ்நாள் முழுதும் இருள் சூழ்ந்த புதைகுழிகளிற்குள் மூழ்கிப் போயிருக்கிறார்கள். அவர்கள் சிறுமிகள், இளம்யுவதிகள், நடுத்தரவயதுபெண்கள், உடல் தளர்ந்த முதியவர்கள் என்று எவரையும் விட்டு வைக்கவில்லை. இறந்த பெண்போராளிகளின் உடல்களை கூட வெறி கொண்டு சிதைத்தார்கள்.

செம்மணியில் கிரிசாந்தி, திருகோணமலையில் கோணேஸ்வரி, வன்னியில் இசைப்பிரியா என்று வெளியில் தெரிந்த பெயர்களிற்கு பின்னே பெயர் அற்ற, முகம் அற்ற ஓராயிரம் பெண்கள் இலங்கை, இந்திய ஓநாய்களால் சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். புத்தனின் தருமம், காந்தியின் அகிம்சை, தேசபக்தி என்ற முகமூடி போட்ட ஓநாய்கள் ஊளையிட்டு எம்பெண்கள் இரத்தம் குடித்தன.

இன்று போர் முடிந்து விட்டது என்று அவர்கள் பிரகடனம் செய்து வெற்றிவிழா கொண்டாடுகிறார்கள். காரைநகரில் பதினொரு வயது பச்சைக்குழந்தை ஒன்று ஏழு கடற்படையினரால் கசக்கி எறியப்பட்டது. அந்தக் கயவர்கள் அவர்களின் கூட்டுக்களவாணிகளான இலங்கைக் காவல்படையினரால் விடுதலை செய்யப்பட்டார்கள். காரணம் சொல்கிறார்கள் "அவள் யாரையும் அடையாளம் காட்டவில்லையாம்". சீருடை போட்ட ஒவ்வொருவனும் ஒரே மாதிரியான ஓநாயாக இருக்கும் போது அதிலே ஒரு கூட்டத்தை அந்தக் குழந்தை எப்படி அடையாளம் காட்டுவாள்?.

அந்த பனங்காடுகளிற்குள் எழுந்த அவளின் கடைசிமூச்சுக்கள் தொண்டைக்குள்ளே உறைந்து, புதைந்து போன மௌனமான அழுகைகள் எதுவும் அந்தப் பேய்களிற்கு கேட்கவில்லை. அவளின் ஆத்மா முடிவற்ற அந்த இருளில் கரையும் போது என்ன நினைத்திருப்பாள்?. யாரை நினைத்திருப்பாள்?. தாலாட்டிய தாயை, தாங்கி வளர்த்த தந்தையை தன்னை தேடி அவர்கள் தவிக்கப் போவதை நீண்டு கொண்டு போகும் இரவுகளில் கண்ணீர் நிற்கா விழிகளுடன் தங்களின் செல்லமகள் பட்ட பாடுகளை எண்ணி பதறப் போவதை என்று எதை நினைத்திருப்பாள்?. என்ன நடந்தது, ஏன் நடந்தது என்று ஏதும் அறியா அந்த சிறுகுழந்தை எண்ணிப் பார்க்க முதலே அந்த நாய்கள் அவளின் கடைசி மூச்சையும் அவளிடமிருந்து பறித்திருப்பார்கள்.

இவை யுத்தத்தின் மரணப்பிடிக்குள் சிக்குண்டு உலகத்தின் பார்வைக்கு வராமல், பதிவுகள், சாட்சியங்கள் எதுவுமின்றி அப்பெண்களினதும், அவர்களினது குடும்பத்தினரினதும் மனங்களில் மட்டும் காலகாலத்திற்கும் தேங்கிப் போய் நிற்கும் கொடுமைகள் என்றால் போர் நடக்காத மற்றப்பிரதேசங்கள், இன ஒடுக்குமுறைக்கு உட்படாத பெண்களிற்கும் இதே மாதிரி கொடுமைகள் தான் நடக்கின்றன. ஒவ்வொரு தொண்ணூறு நிமிடத்திற்கும் ஒரு இலங்கைப்பெண் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுகிறாள். ஒவ்வொரு வருடமும் பாலியல்வன்முறைகள் கூடிக்கொண்டே செல்கின்றன. 2008 இல் 1582 பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 1157 பேர் பதினாறு வயது கூட தாண்டாத சிறுமிகள். 2012 இல் 1653 பெண்கள் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 1405 பேர் சிறுமிகள்.

சிறுவயது பெண்கள் பெரும்பாலும் அவர்களிற்கு தெரிந்தவர்களாலேயே வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். குடும்பத்தவர்கள், உறவினர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள், மதகுருக்கள் என்று பலதரப்பினராலும் அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். கட்டற்ற ஊடகவளர்ச்சி காரணமாக வீட்டிற்குள்ளேயே வந்து விழும் அழிவுக் கலாச்சாரத்தின் கழிவுகள், அதிகரித்து வரும் மதுபாவனை, வறுமை காரணமாக மனைவிகள் வெளிநாட்டிற்கு வேலைக்கு போக தனித்து விடப்படும் கணவர்கள், பாலியல் கல்வியை பள்ளிகளில் கற்பித்தால் உலகமே அழிந்து விடும் என்று ஊளையிடும் கலாச்சாரக்காவலர்கள் என்பன இக்குற்றங்களிற்கு பெரும்பாலான காரணிகளாக அமைகின்றன.


கோணேஸ்வரியை கொலை செய்த இலங்கை அரசின் ஜனாதிபதி மகிந்தாவை மாலை போட்டு வரவேற்றவர்கள் இன்று வித்தியாவிற்காக போராடுகிறார்களாம். இசைப்பிரியாவை கொலை செய்த இலங்கை இராணுவத்தின் தளபதி பொன்சேகாவுடன் கூட்டு வைத்தவர்கள் இன்று வித்தியாவிற்காக போராடுகிறார்களாம். மகிந்த ராஜபக்சவுடனும், சரத் பொன்சேகாவுடனும் இணை சேர்ந்திருந்த இன்றைய ஜனாதிபதி மைத்திரி சிரிசேனாவை ஆதரித்தவர்கள் இன்று வித்தியாவிற்காக போராடுகிறார்களாம். மக்கள் திரண்டு போராடும் போது அதை திசை திருப்புவதும், அதில் அரசியல் லாபம் அடைய நினைப்பதும் தான் இந்த சந்தர்ப்பவாத கயவர்களின் அரசியல்.

இசைப்பிரியாவின் ஆடையற்ற தோற்றத்தை, எம் சகோதரியின் அவலத்தை, படுகொலை செய்யப்பட்ட நம் பெண்ணின் உடலை பகிரங்கமாக்கியது மனிதநாகரிகத்திற்கு ஒவ்வாத செயல். இசைப்பிரியாவின் குடும்பத்தவர்கள் இக்காட்சிகளை காணும் போது எப்படி துடிப்பார்கள்?. உடையற்ற அவளின் உடலை காணும் போது எப்படி கலங்குவார்கள். தங்களது லாபங்களிற்காக எம் பெண்களின் உடல்களை காட்சிப்படுத்துவதை கண்டிப்போம் என்று இசைப்பிரியா கொலை செய்யப்பட்ட போது எழுதியிருந்தோம். பத்திரிகைகளில், ஒளி ஊடகங்களில், சமுக வலைத் தளங்களில் இன்று அதையே மறுபடியும் செய்கிறார்கள். காமுகர்களால் எம் சகோதரி வித்தியா ஒரு முறை கொல்லப்பட்டாள். இந்தக் கயவர்களால் ஒவ்வொரு முறையும் கொல்லப்படுகிறாள்.

தனது தோழர்களிற்காக, சரிநிகர் சமானமாக வாழ எழுந்த புரட்சிக்காக தன் உயிரைக் கொடுத்த கதிர்காமத்து பிரேமாவதி மன்னம்பெரியை் அவள் கதிர்காமத்தின் அழகு ராணியாக தெரிவு செய்யப்பட்டவள் என்பதனால் "கதிர்காமத்து அழகி கொலை" என்று செய்தி வெளியிட்ட பத்திரிகைகளின் பரம்பரைகள் தான் இன்றைய ஊடகங்கள். பெண்களை அழகை வைத்து, உடலை வைத்து மட்டும் மதிப்பிடும் சதைவியாபாரிகள் தான் இந்த ஊடகங்கள்.

தமிழ்ச் சமுதாயத்திற்காக தமது சொந்த வாழ்வை துறந்து தீ பற்றி எரியும் யுத்த களங்களிற்கு சென்ற எமது பெண் போராளிகள் இன்று தமிழ்ச் சமுதாயத்தால் தீண்டப்படாதவர்களாக நடத்தப்படுகிறார்கள். காலனைக் காலால் உதைத்த அவர்கள் இன்று தமது சொந்த சகோதர, சகோதரியரான இந்த தமிழ் சமுதாயத்தின் ஒதுக்குதல் கண்டு உடைந்து போயிருக்கிறார்கள். எவரின் அவலவாழ்வு கண்டு கனன்று எழுந்து போராடச் சென்றனரோ அவரே தம்மை சுமையாக, அவமானமாக நினைப்பது கண்டு தமது உயிரைத் துறந்த அவலம் ஆணாதிக்க தமிழ்ச் சமுதாயத்தின் அண்மைய வரலாறு.

எமது அரசியல்வாதிகள் ஆணாதிக்கவாதிகள்.



எமது ஊடகங்கள் ஆணாதிக்க ஊடகங்கள். எமது சமுதாயம் ஆணாதிக்க சமுதாயம். எமது பண்பாடு ஆணாதிக்கப் பண்பாடு. எமது மதங்கள் ஆணாதிக்க மதங்கள். வேலைத்தளங்களில் அவர்கள் பரிகசிக்கப்படுகிறார்கள். பாலியல் தொந்தரவுக்கு உள்ளாகிறார்கள். வீடுகளிலே அவள்

தொடர்ச்சி பக்கம் – 15 இல்



படிப்பகம்

# வில்பத்து : உண்மையான அழிவு இதோ

சில வாரங்களாக ஊடகங்களில் சுடச்சுட வந்த செய்திகளின் கதாநாயக காணப்பட்டவர் அமைச்சர் ரிசாத் பதூர்தீன். வில்பத்து சரணாலயத்திற்கு உட்பட்ட காட்டை அழித்து முஸ்லிம்களை மீள் குடியேற்ற மும்முரமாக ஈடுபட்டமை தான் அதற்கு காரணம். மடு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 500 ஏக்கரும், முசலி பிரதேசத்திலிருந்து 300 ஏக்கரும் மாந்தை பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 300 ஏக்கரும் என்ற வகையில் வன பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதியுடன் காடுகளை வெட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2012 ஜுலை 04ம் திகதி ஜனாதிபதி செயலகம் முன்வைத்த



ஆலோசனைக்கேற்ப, இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்காக காடுகள் வெட்டப்பட்டன. தவிரவும், ஜனாதிபதி செயலணி மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் அதிகாரிகளினால் மேற்படி பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து 2500 ஏக்கரை விடுவிக்குமாறு வன பாதுகாப்பு திணைக்களத்திடம் கேட்கப்பட்டுள்ளது. எனவே, எந்த அதிகாரத்துதை கொண்டு வில்பத்து காடு அழிக்கப்படுகிறது என்பது குறித்து ஆராயப்பட வேண்டும். இனவாத அமைப்புகளும், மதவாத குழுக்களும் இணைந்து, இந்த காடழிப்பிற்கு முழுமுதற் குற்றவாளியாக இன்றைய அரசாங்கத்தின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதூர்தீனின் பக்கம் விரல் நீட்டுகின்றன.

அவர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திலும் முக்கிய அமைச்சுப் பொறுப்பில் இருந்தார். அப்போதும்கூட மீள் குடியேற்றம் என்ற பெயரில் பாரிய அளவிளான காடுகள் அழிக்கப்பட்டன. இதனால், மேற்படி மதக் குழுக்களும் இனவாத அமைப்புகளும் மைத்திரிபால அரசாங்கத்திற்கும், அமைச்சர் ரிசாத் பதூர்தீன் மீதும் பழி சுமத்துவதில் ஆர்வம் காட்டுவது தெரிகிறது. இந்தளவு பென்னாம் பெரிய காடழிப்பு இன்று நேற்று தொடங்கப்பட்டதல்ல. அதன் கடைசி குற்றவாளி ரிசாத் பதூர்தீன் என்று நாமகரணமிட்டு, பிரச்சினையின் ஒரு பகுதியை மாத்திரம் கையிலெடுத்து இனவாதத்தை தூண்ட எடுக்கப்படும் முயற்சிதான் இது. சூழல் அழிப்பை மறைத்துக் கொண்டு இனவாத கரும்புகையை பரவலாக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சியை உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

2009 யுத்த வெற்றியின் பின்னர், "மீள் குடியேற்ற"த்திற்காக காடழிப்பதற்கு நியாயமான காரணியொன்று உருவாகியது. 2010ல் விஸ்வமடு ஒதுக்கப்பட்ட காட்டுப் பகுதியில் கோம்பாவில் காட்டை அழித்து இடம் பெயர்ந்த மக்களை குடியேற்றும் நடவடிக்கை ஆரம்பமாகியது. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் நிதி உதவியுடன் முல்லைத்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கோம்பாவில் காட்டில் 100 ஏக்கர் வெட்டப்பட்டது. யுத்தம் நடந்தது காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் திவாரத்ன கமிட்டியின் மூலம், மாவட்ட செயலாளர்களினது அங்கீகாரத்துடன் 1000 ஏக்கர் காட்டை வெட்டி சுத்தம் செய்ய செட்டிகுளம் முகாமுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

2011ல் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மூலோபாய ரீதியிலான மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் மீள் குடியேற்றத்திற்காக காடுகளை வெட்டி அகற்றுதல் சம்பந்தமான முறையொன்று தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கைசூழல் மட்டத்தில் ஓரளவு பாராட்டை பெற்றாலும், பசில் ராஜபக்ஷவின் தலையீட்டின் காரணமாக அந்த அறிக்கையை பகிரங்கப்படுத்தாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வறிக்கையில் மீள் குடியேற்றப்படும் இடங்கள் குறிக்கப்பட்டிருந்தாலும், தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தது என்ற முத்திரையின் கீழ் அனைத்தும் கவனிக்காது விடப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிலிருந்து அனுமதி பெறுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது. இதனால் ராஜபக்ஷ லாக்களுக்கும் பதூர்தீன்களுக்கும் நினைத்தபடி வேலை வேலை செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

கோட்டாபய ராஜபக்ஷவின் தலையீட்டினால் கருவலன்குளம் காட்டில் 4000 ஏக்கர் காடு வெட்டப்பட்டு 5 கிராமங்கள் அமைக்கப்பட்டன. குருநாகல், அம்பாறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து சிங்கள மக்களை புதிதாக குடியமர்த்தி நாமல் கம, நந்திமித்ர கம போன்ற பெயரில் 5 கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காடழிப்பு சம்பந்தமாக பதூர்தீன்களுக்கு விரல் நீட்டும் இனவாத குழுக்களுக்கு ராஜபக்ஷாக்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை. இந்த ராஜபக்ஷாக்களும், பதூர்தீன்களும் கூட்டாக மேற்கொள்ளும் காடழிப்பிற்கு அடிப்படையொனறு உள்ளது. பதூர்தீன்களும் ராஜபக்ஷாக்களும் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பேதமின்றி நாட்டு மக்களுக்கு துரோகமிழைத்துள்ளனர். சூழல் விரும்பி, தேசாபிமான குழுக்கள் அனைத்தும் தமது போராட்டத்தை முஸ்லிம்களுக்கு எதிராக திருப்புவதற்கு முன்பு மேலும் பல குற்றவாளிகள் உள்ளதை மறக்கக் கூடது.

2011 – 2030 வரை செயற்படுத்த திட்டமிட்டுள்ள தேசிய இயற்பியல் திட்டத்திற்கேற்ப, இலங்கையின் பொருளாதாரம் பாரிய நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்பது தெளிவு. பிரதானமாக அமைக்கப்பட்டு வரும் கொழும்பு – மாத்தறை அதிவேகப் பாதையும், ஏனைய அதிவேகப் பாதைகளும் காரணமாக உலக உரிமையாக கருதப்படும் காடுகளில் ஒன்றான சிங்கராஜ காடு இருமுறை துண்டாடப்படுவதுடன், சிங்கராஜ உட்பட 39 பிரதான காடுகள் இந்த



அபிவிருத்தியின் பெயரால் அழிக்கப்படுகின்றன.

உடவளவை தேசிய வனப்பூங்கா, மேற்கு மலை, லுனுகம்வெஹர, மதுநாகல, வீரவில, நிமலவல, புந்தல, உஸ்ஸன்கொட, கதிர்காமம், கட்டகமுவ, ருுஹனுயால, புத்தகல, சாகம, உல்பஸ்ஸ, எகொடயாய, மஹகனதராவ, அநுராதபுரம், மிஹிந்தலை, ரிட்டிகல, கஹல்ல, பல்லெகலே, சீகிரி, மின்னேரிய, கிரிதலே, எலஹெர, பகமூன, கவுடுள்ள, சோமாவதிய, நெவல்ஹெட்வர்க், சுண்டிக்குளம், வில்பத்து, யோதவெவ, செங்கலடி, மடு காப்பு பிரதேசம், முதுராஜவல, கலமட்டிய, பெரியகச்சி போன்ற தேசிய பூங்காக்கள் இயற்கை பாதுகாப்பு மற்றும் கடுமையான இயற்கை பாதுகாப்பு, பிரதேசங்கள், அதிவேகப் பாதைகள் அமைப்பதன் காரணமாக அழிவை எதிர்நோக்கியுள்ளன. 2012ல் 16.5 சதவீதமாக காணப்பட்ட இலங்கை காடுகளின் விகிதம், 2030 ஆகும்போது, 13 சதவீதமாக குறைந்துவிடும்.

2011ல் உத்தேச சரணாலயத்திற்கு உரித்தான பிரதேசங்களிலிருந்து னுழுடந மற்றும் ஊஜஊ நிறுவனங்களுக் 6500 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இப்படியாக, காட்டுப் நிலங்கள் வியாபார விவசாயத் தொழில்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில், இலங்கையின் அடர்ந்த காடுகள் 2030 ஆகும்போது 10%மாக குறைந்துவிடும்.

2012 ஆகும்போது பயனீட்டிற்கு எடுக்கப்பட்டுள்ள நிலம் 54713.375 சதுர கிலோமீட்டர். எஞ்சிய காடுகள் 10811.63 சதுர கிலோமீட்டர். 2012 ஆகும்போது இலங்கையின் மொத்த நிலப்பரப்பு 65525 சதுர கிலோமீட்டர்.

மஹிந்த ராஜபக்ஷவினால் செயற்படுத்தப்பட்டு இன்றைய அரசாங்கத்தின் கீழ் நடைமுறைபடுத்தப்பட்டு வரும் தேசிய இயற்பியல் திட்டத்திற்கேற்ப, 2030 ஆகும்போது இலங்கையில் பயன்படுத்தப்படும் மொத்த நிலப்பரப்பு 58972.5 சதுர கிலோமீட்டராக இருக்கும். எஞ்சும் காடுகளின் அடர்த்தி 6525 சதுர கிலோமீட்டராகும்.

தற்போது உலகில் ஆரம்ப காடுகளை அழிக்கும் நாடுகளில் இலங்கை 4வது இடத்தை வகிக்கிறது. மாத்திரமல்ல, காடழிப்புடன் சேர்த்து மரபியல் பன்முகமும் அழியக்கூடிய நிலை ஏற்பட்டு பாரதூரமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்படும்.

இந்த தேசிய இயற்பியல் திட்டம் என்பது வேறொன்றுமல்ல, 2001ல் செயற்படுத்தப்பட்ட Regaining Sri Lanka வேலைத்திட்டம்தான். பெயர் மட்டுமே மாறியிருக்கிறது. ரணில் விக்ரமசிங்கவின் 2001 வேலைத்திட்டம் 2015ல் ரணிலின் அரசாங்கத்தினாலேயே செயற்படுத்தப்படுகிறது. அதில் மைத்திரிபாலவும் உள்ளார். அந்த இயந்திரம் மஹிந்த ராஜபக்ஷவால் இயக்கப்பட்டது.

இந்த பாரிய சூழல் அழிவிற்கு பதூர்தீன்களும் – ராஜபக்ஷாக்களும் காரணமாக காட்டப்படுகின்றனர். பொய் இனவாத அனுகுமுறைகளைக் கைவிட்டு, உண்மையான பிரச்சினையை பார்க்க வேண்டும்.



படிப்பகம்

# பாலியல் வன்முறைக்கு

## நிறம் – இனம் – நாடு – மதம் – சாதி இல்லை

பாலியல் வன்முறை செய்பவர்களுக்கு நிறம் இல்லை, இனம் இல்லை, நாடு இல்லை, மதம் இல்லை, சாதி இல்லை ஆனால் வர்க்கம் உண்டு. அது தான் ஆண்வர்க்கம். உலகத்தில் பெண்களைக் குதறாமல், பாலியல் வன்புணர்வு செய்யாமல் எந்த நாட்டு இராணுவமும் இல்லை. அமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய, இந்திய, இலங்கை, தமிழ் இராணுவம் எதுவுமாக இருக்கட்டும், பெண்கள் மேல் வன்கொடுமை செய்யாதவர்கள் யாரும் இல்லை. புங்குடுதீவிலும் இன்று கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு அதன் பின்னர் கொலையும் செய்யப்பட்டு வீசப்பட்டிருந்த சிறுமி மீதான கொடூரம் எத்தனை மடங்குகளால் முடியுமோ அத்தனை மடங்குகளாலும் வீச்சாக கொடுமைகளை மறந்து விட்டீர்களா? அங்கேயும் இருக்கிறார்கள் இந்த வன்புணர்வு செய்தவர்களுக்கு உதாரண புருஷர்கள்.


நீங்கள் கலாச்சாரம் என்பீர்கள் அதுவும் தமிழ் கலாச்சாரம் என்பீர்கள், கோவில், குளம், இறைபக்தி என்பீர்கள். பொது இடம், போக்குவரத்து என்பீர்கள். நீங்கள் சன நெருக்கடி சாட்டில் பெண்கள் மேல் உரசி சாயாதா பஸ்கள் உண்டா? நெரிசலை சாட்டாக வைத்தும், சடுதியான பிரேக் போடும் போதும், பெண்களின் மார்பகங்களை தீண்டிப் பார்ப்பவர்களில்லையா நீங்கள்? கோவில்களில் கூட விபூதியும் சந்தனமும் இட்டு, பெண்களை எங்களது கலாச்சாரத்தை சீரழிக்க வந்து விட்டார்கள் என்று பெண்களாலேயே தூசிக்கப்படுகிறார்கள்.



டேய் அங்கே பார்றா? மேட் இன் இலங்கை, அசம்பிளிட் இன் போறின் கன்றி என்று ஆகக் குறைந்தது பக்தி கலாச்சாரத்தைப் பேண வேண்டும் என்று கூவுகின்ற கோவில்களில்

சமூகத்தால் வெறுத்தொதுக்கப்பட வேண்டியது. சமூகத்தின் கடுமையான சட்டகங்களுக்குள், குறிப்பாக பெண்களின் வலிமையானதும் வன்மையானதுமான போராட்டங்களால் வழித்து துடைத்தெறியப்பட வேண்டியது.

புங்குடுதீவு வன்புணர்வும் கொலையும் வெளியில் தெரிந்துவிட்ட பாலியல் வன்முறைக் கொடூரம் ஆகிவிட்டது. ஆனால் வீட்டுக்குள், அடுப்பங்கரைக்குள், பாடசாலைச் சுவர்களுக்குள், பல்கலைக்கழக அறைகளுக்குள், இருள் கவிந்த தெருக்களுக்குள், வேலைத்தலங்களில் ஏழ்மையை போக்க எதற்கும் இடங்கொடுத்தாக வேண்டும் என்ற நெருக்கடிகளை ஏற்படுத்தும் ஆண் அதிகாரிகள் மத்தியில், அவர்களது இச்சைக்கு இணங்க வேண்டும் என்ற நிர்ப்பந்தங்களுக்குள், குடும்பப் பசியை,





குடும்பத் தலைவனை இழந்த தாயாயின் குழந்தைகளின் பசியைப் போக்குவதற்கு இந்த ஆண்களது பசியைப் போக்கியாக வேண்டும் என்ற இடர்பாடுகளுக்குள் வாழுகின்ற பெண்கள் எல்லோருமே பாலியல் நிந்தனைக்குள்ளும், மறைமுகப் பாலியல் வன்புணர்வுக்குள் நாளாந்தம் வெந்து சாகிறார்கள். அவர்களது உதடுகள் பேசுவதில்லை. மனங்களில் அச்சத்தையும், பாரத்தையும் சுமந்து மவுனமாகவும் நசிந்தும் அவர்கள் சமூகத்தில் உலா வருகிறார்கள். வெளிப்படையாக எதிர்த்து நின்றால், பழிவாங்கல், உயிருக்கே அச்சுறுத்தல், கெட்ட நடாத்தை கொண்டவள் என்ற பழி ஆண்களால் எளிதாக உருவாக்கப்படலாம் என்றெண்ணி மவுனத்திலும் மனவுளைச்சலிலும் வாழ்கிறார்கள். அடங்கியிருக்க வேண்டியவர்கள் பாலியல் குற்றம் செய்யும் ஆண்கள் அல்ல மாறாக வம்பினை விலைக்கு வாங்கிக் கொண்டு வரும் பெண்கள் தான் என சமூகம் கற்பிக்கிறது. புங்குடுதீவுச் சிறுமியின் வன்புணர்வுக் கொலை பல சம்பவங்களில் ஒரு சம்பவம். இதற்கு எகிறிக் குதிக்கின்ற அடக்குமுறை ஆண்களே நாளாந்தம் இப்படி நீங்கள் வசதியான இடங்களில் இருந்துகொண்டு தருவது தானே இந்தப் பாலியல் தொல்லைகள். தங்களை விடுதலை இயக்கம் என அழைத்துக்கொண்ட ஆயுதம் ஏந்திய இயக்கங்களின் ஆண் போராளிகள் ஆயுத முனையில் தங்கள் சக பெண்போராளிகளை பலாத்காரம் செய்து கொன்று புதைக்கவில்லையா? அவர்களை விடுதலை இயக்கத்தின் தலைமைகள் பெண்களுக்கு எதிரான கொடுமைகளை இழைத்தவர்கள் என என்றாவது பிரகடனப்படுத்தியிருந்தனவா? இயக்கங்களின் முன்னணி தலைவர்கள் பாலியல் ஒடுக்குமுறைகளில் அத்துமீறி நடக்கவில்லையா? பாடசாலைகள், அனாதைக் குழந்தைகள் இல்லம், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குள் நடக்கின்ற பாலியல்

நாகரீகமாக உடை அணிந்து வர வேண்டும் என்று விதிகளும் வைத்துவிட்டு, நீங்கள் மட்டும் மேற்சட்டை அணியாது அரைகுறையாக உடுத்திக் கொண்டு, பொத்தி உடையுடுத்திய பெண்களின் அங்க அவயவங்களை உறுத்துப் பார்த்துக் கண்களை மேயவிடுவதில்லையா நீங்கள்? சாறி தான் பெண்கள் கட்டவேண்டும். அதுவே தமிழ்பெண்கள் கலாச்சாரம். அப்படி உடுத்தாமல் வேறு ஆடை அணிபவர்கள் எல்லாம் ஆண்களாகிய எவருக்கும் தங்கள் உடல்களை தீண்டிப்பார்க்கும்படியான அழைப்பு விடுக்கும் பெண்கள் என்று நீங்கள் நினைத்து விடுவீர்கள். ஆங்காங்கே வெறித்த பார்வையாலும், விகாரமான பாலியல் கழிசடை எண்ணம் கொண்ட இரட்டை அர்த்த வார்த்தைகளாலும் உங்களுக்குள் எழுகின்ற பாலியல் வக்கிர எண்ணங்களை ஆண் என்ற அகங்காரத்துடன் அள்ளி பெண்கள் காதுகளுக்கு கொட்டுவீர்கள். நான் ஆண் நீ பெண். உனது உடலே எனக்குரிய பொருள். ஒரு ஆணுக்கு கீழான நிலையிலேயே பெண் நடந்துகொள்ள வேண்டும் என்பது எல்லாம் ஆண் என்ற அதிகாரமில்லையா? இப்படியான ஆண்களின் சேஷ்டைகளையும் சொறிதலையும் அனுபவத்தில் கண்டிராத, விகற்பம் எதுவும் இல்லாமல் தானுண்டு தன்பாடுண்டு என்று சகஜமாகவே உடையுடுத்திப் பழகும் கொண்ட வெளிநாட்டிலிருந்து வரும் வெள்ளையினப் பெண்களாகட்டும், அல்லது வெளிநாடொன்றில் பிறந்து வளர்ந்து அதே நடையுடை பாவனையுடன் வருகின்ற தமிழ் இளம் சிறுமிகளோ அல்லது பெண்களோ ஆகட்டும். அவர்களது மனமும் அறிவும் பக்குவமும், அன்பும், ஆளுமையும், கருணையும் கண்ணுக்கு தெரிவதற்கு முன்னர் அவர்களது ஆடைகள் தான் உங்கள் காமத்தைக் கிளறுவதாக கூக்குரல் இடுவீர்கள். ஆனால் அவர்கள் விடுதிகளில் தங்கினால் அவர்களை காம நோக்குடன் அத்துமீறி உரசிப் பார்ப்பீர்கள் (யாழ்ப்பாண தினசரி செய்தித் தாள்களில் படிக்கக் கிடைத்தது). இவ்வாறு வரும் பெண்கள், கலாச்சாரம் பற்றிப் பீற்றிக் கொள்ளும் ஆண்கள் நிரம்பியிருக்கின்ற பிரதேசங்களில் பாலியல் ஆபத்தில்லை என்ற எண்ணத்துடனேயே வருகிறார்கள். ஆனால் அந்தப் பிரதேசத்திலுள்ள ஆண்களின் ஊடுருவும் பார்வைகளாலும் மேலாதிக்க எண்ண வெளிப்பாடுகளும் அவர்களுக்கே அதிகம் கூசுகிறது. அவர்களுக்கு இது ஒப்பீட்டளவில் புது அனுபவம் என்பதால் வெள்ளைத்தாளில் கிறுக்கிய கறுப்புக் கோடுகளாக இலகுவில் கண்டுகொள்கிறார்கள். உள்நாட்டிலுள்ள பெண்கள் ஆண்கள் இப்படித்தான் என்று மட்டுமே கற்று வைத்திருக்கிறார்கள்.

வெளிநாட்டுச் சூழலுக்குள் எவ்வாறு உடுத்தினாலும் அத்துமீறி நடக்க முனையாத ஒப்பீட்டளவில் அதிகமான ஆண்களைக் கண்ட பெண்கள் ஊருக்கு வருகிறபோது உஸ்ண காலநிலைக்கேற்றவாறான இயல்பாக உடையுடுத்தி, அதே பாதுகாப்பான உணர்வுடன் எவருடைய கண்ணுக்கும் விருந்தளிக்க வேண்டும் என்ற எண்ணமின்றி உடையணியப் பழக்கப்பட்ட முறையிலேயே உடையணிகிறார்கள். ஆனால் உள்ளூரில் அவர்கள் "ஆட்டக்காரப்" பெண்கள்

வைத்தே ஆண்களுக்கு பெண்களின் வாடை வீசினால் கூட அவர்களது ஆடைகளுக்குள் தான் கவனம் போகின்றது. இது தான் இவர்கள் கொக்கரிக்கின்ற கலாச்சாரம். (நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில்).

சனநெரிசலான பஸ்சுக்குள் ஏறி பயணம் பண்ணுகின்ற பெண்களின் கால்களுக்கிடையிலும், மார்பகங்களுக்கிடையிலும் இவர்கள் செய்கின்ற சேஷ்டை தான் தமிழ் கலாச்சாரம். ( இளம் பெண்கள் படுகின்ற அனுபவங்களின் வாக்குமூலங்கள் இவை)

இரவுநேர சி.ரி.பி பஸ்களில் பெண்களுக்கென்று தனியாக சீற் ஒதுக்கப்பட்டிருப்பினும் தற்செயலாக இடம் இல்லாமல் போனால் நித்திரையில் தூங்கி விழுகின்ற சாக்கில் பக்கத்தில் இருக்கக்கூடிய பெண்களின் ஸ்பரிசத்துக்கு இவர்கள் செய்யும் ரிக்ஸ்சுகள் ஏராளம். (சில கனிவான பஸ் கண்டக்ரர்கள் தலையிட்டு இடம் மாற்றி தொந்தரவுகளிலிருந்து விலத்தி வைக்கிறார்கள். சக பயணியாய் கண்டு கொண்ட சொந்த அனுபவம்)

உனக்கு ஒரு பெண்ணில் விருப்பமா நேரிடையாகவே உன் காதலைச் சொல்லிக் கேட்டுவிட்டு மறுபக்கத்தில் விருப்பம் இல்லையெனில் விட்டுவிடு. அத்துமீறி நடப்பதற்கும் ஒரு பெண்ணுடலைத் தீண்டுவதற்கும் ஜடமல்ல அவள். உன்னையே போல் உள்ள சமவுரிமையுள்ள ஒரு மனித ஜீவன். பெண்ணுக்கு எங்கும் எப்போதும் உன்னைப் போலவே அச்சமின்றி நடமாடும் உரிமையுண்டு.

ஒரு ஆணுக்கு, மனிதன் என்ற வகையில் கேடுதலில்லாத என்னென்ன உரிமைகள் உண்டோ அதற்கு நிகரான அத்தனை உரிமைகளும் பெண்களுக்கும் உண்டு.

கல்வி, தொழில்வாய்ப்பு, பதவி போன்ற எல்லாவற்றிலும் பால் பாகுபாடின்றிய அதே உரிமை கொண்டவள் பெண்.

ஒரு சமூகக் கட்டடைப்பின் விளைபயிர் தான் குற்றவாளிகள். குற்றவாளிகளை தூக்கில் போட்டுவிடலாம். எதுவும் நடக்கப் போவதில்லை. ஆனால் அந்தக் குற்றவாளிகள் விளைகின்ற



பின்புலங்களை தூக்கில் ஏற்ற வேண்டும். சமூக விதிகளையும், அந்தச் சமூக விதிகளுக்கு வழிவிடும் கட்டமைப்புக்களை மாற்றாதவரை குற்றவாளிகள் தோன்றிக்கொண்டே இருப்பார்கள்.

# 100 நாட்கள் முடிந்துவிட்டன குட்டிமணிகள் இன்னும் சிறையில்

எமது சமூகத்திற்கு போதும் போதும் என்ற அளவிற்கு ஜனநாயகத்தை தருவதற்காக ஆட்சிக்கு வந்த, மைத்திரீ, ரணில், ஹெல உருமைய, ஜேவிபி, டீ.என்.ஏ உள்ளிட்ட கூட்டரசாங்கம் 100 நாட்களையும் கடந்துவிட்டன. 100 நாட்களுக்குள் அனைத்து திறமைகளையும் வெளிக்காட்டுவதாக, தேர்தலுக்கு முன்பு. தம்பட்டமடித்தார்கள்.



ராஜபக்ஷாக்களின் ஜனநாயகம் ராஜபக்ஷ சார்பு நண்பர்களுக்கே கிடைத்தது. ஏனைய இலங்கையர்கள் வெள்ளை வேன் கடத்தலுக்கும், பயமுறுத்தல்களுக்கும் உள்ளானார்கள். வடக்கின் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டதை, புதிதாக கூற வேண்டியதில்லை. அந்த கொடுமைகளிலிருந்து மீள்வதற்கு, டீ.என்.ஏ. வுடன் சேர்ந்து தமது வாக்குகளை மைத்திரிபாலவுக்கு மொத்தமாக தூக்கிக் கொடுத்தார்கள். என்றாலும் என்ன பயன்? வாக்குகள் ஏலம் போனதுதான் மிச்சமே தவிர ஒன்றும் நடந்ததாக தெரியவில்லை. இன்றும்கூட அவர்களது வாக்குகள் ஏலமிடப்படுகின்றன.

"சொன்னதை செய்த ஒரே தலைவரென போஸ்டர் அடித்து, நிறைவேற்று அதிகாரத்தை அப்படியே வைத்துக் கொண்டு, மைத்திரிபாலாக்கள் எமக்கு ஜனநாயகத்தை பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஜே.வி. பி.யையும் கூட்டு சேர்த்து, மாணவர் அமைப்பின் செயற்பாட்டாளர்களை ஒவ்வொருவராக வேட்டையாடுகிறார்கள். கைது செய்யப்படும் ஒரு சந்தேக நபரை 24 மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அவர்களே தயாரித்துக் கொண்ட சட்டம், நூலில் குறிக்கப்பட்டுள்ள நிலையிலும், ஜனவரி 8ம் திகதி அதிகாரத்திற்கு வந்து ஒருவாரம்கூட ஆகதா நிலையில், அந்த கால எல்லையை 48 மணித்தியாலங்களாக அதிகரித்து மேலும் இரு வருடங்களுக்க நீடித்துக் கொண்டார்கள். நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படுவது எப்படியிருந்தாலும், "சொன்னதை செய்யும் தலைவர்களுக்கும்", அவர்களை அதிகாரத்திற்கு கொண்டுவர ஒத்துழைத்தவர்களுக்கும், அதற்காக தோற்றி நின்ற சோபித தேரர் உட்பட பல்வேறுபட்ட நபர்களுக்கும் கிடைத்த ஜனநாயகம் சம்பந்தமான கேள்வி எமக்கெதிரே தாண்டவமாடுகிறது. வடக்கின் போராளிகள், அல்லது தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைக் கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். கிடைத்த ஜனநாயகமும், சுதந்திரமும் இதுதானா?

இது சம்பந்தமான வரலாறு மிக பயங்கரமானதாகும். கைது செய்யப்படுபவர்களின் தலைவிதி எப்போதும் கொடூரமாகத்தான் இருக்கும். அது, வடக்கில் நடந்த யுத்த நடவடிக்கைகளின்போது கொடுமையாக இருந்ததேயன்றி, நன்மையாக இருக்கவில்லை.

பல்வேறு இன்னல்களை கடந்து வந்த ஒரு சந்தேக நபர்களை நாம் சந்திக்கிறோம். பெரும்பாலானோர் வெலிகட, பூஸா, அல்லது மகஸினுக்கு வருவதில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கும்போதே பல்வேறு சித்திரவதைகளினால் வாழ்க்கையிலிருந்து விடைபெற்று சென்றுவிடுகின்றனர். இன்று, பீல்ட மார்ஷலாக பதவி உயர்த்தப்பட்ட பொன்சேகா, யாழ்ப்பாணத்தில் கட்டளை தளபதியாக இருந்த காலத்தில், அவரது படைப்பிரிவின் சிப்பாய்கள் கண்ணிவெடியில் சிக்கி மரணித்தார்கள் என்பதற்காக கோபம் தலைக்கேற, நூற்றுக்கணக்கான ஆண், பெண் சந்தேக நபர்களை அடைத்து வைத்திருந்த கட்டிடத்தை குண்டு வைத்து தகர்த்து அத்தனை பேரையும் கொன்றார். இதற்காக அவருக்கு கிடைத்த தண்டனை யாழ்ப்பாணத்திலிருந்து பனாகொட இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டமைதான். இவ்வாறு, நந்திகடல் சம்பவத்தின் பின்னரும், கைது செய்யப்பட்ட, தமது உறவினர்களுடன் சென்று சரணடைந்த அனைவருக்கும் இந்த கதிதான் ஏற்பட்டது. இப்படியான நிலைமைகளை கடந்து உயிர் பிழைத்த சிலரைத்தான், சிறைச்சாலைகளில் கைதிகளாக நாங்கள் சந்தித்தோம்.

அவர்களது தலைவிதி எப்படியிருக்கும் என்பது தெரிந்த விடயம்தான். இதில், மிகவும் வேதனைப்படக்கூடிய சம்பவம் 83 ஜுலை சம்பவம்தான். அப்போது வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, வடபுல போராட்டத்தின்போது நாங்கள் சந்தித்த, கீர்த்தி பெற்ற போராளியான குட்டிமணி, ஜெகன் உட்பட 43 பேர் அடித்துக் கொள்ளப்பட்டனர். அது இலங்கை கொலை வரலாற்றின் காட்டுமிராண்டித்தனமான அநுபவமாகும். என்றாலும், அது எவ்விதத்திலும், அவ்வாறு அதிர்ச்சியளிக்கக் கூடிய ஒரு சம்பவம் நடக்கக் கூடாது என்ற மனநிலைக்கு, இலங்கை சமூகத்தை கொணடுவர முடியவில்லை. அது குரலற்ற மனிதர்களின் இன்னொரு மரணமாகத்தான் இருந்தது,

இதன் விளைவாக, அவ்வாறான தாக்குதல்களும், கொலைகளும் பொதுவான சம்பவங்களாகவே கருதப்பட்டன. 88–89 போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டவர்களும் இந்த தலைவிதிக்கு முகம் கொடுத்தனர். மகஸீன், பூஸா போன்ற சிறைச்சாலைகளில் இவை பொதுவான அநுபவங்களாக இருந்தன. கடந்த ராஜபக்ஷ ஆட்சியில் நடந்த மனிதப்படுகொலைகளும் அந்த இருளுக்குள் மறைந்த இன்னொரு கதை மாத்திரமே. ஆகவே, வவுனியாவில் அடித்துக் கொல்லப்பட்ட நிமலரூபன், டெல்ருக்ஷான் ஆகியோரின் மரணங்கள் படுகொலை பட்டியலில் சேர்க்கப்படவில்லை. மனித உரிமை மீறல் என்ற வகையில்கூட பேச்சுவார்த்தை மேடைக்கு வரவில்லை.

இப்போது, எஞ்சியுள்ள மனிதர்களைப் பற்றியே நாங்கள் கூறுகிறோம். மேலோட்டமாக பார்க்கும்போது, குறைந்தபட்சம் ஐந்து வருட சிறைத் தண்டனை கிடைத்துள்ளது. இவர்களில் பலவேர் 10, 15, 20 வருடங்களாக தண்டனை அநுபவித்து வருகின்றனர். சிலருக்கு எந்த வழக்கும் கிடையாது. இன்னொருவர் தண்டனையை அநுபவிக்கிறார். அநேகமானோர் இன்னும் சந்தேக நபர்கள்தான். முப்பது வருட யுத்தம் எங்களுக்கு சுபீட்சத்தை கொண்டுவரவில்லை. நாள்தோறும் படுகொலைகளே நடந்தன. அதனால் துன்பப்பட்டதும், வேதனைப்பட்டதும் எமது மக்கள்தான். பெரும்பாலானோர் யுத்தத்தில் சிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இருபக்க முகாம்களிலிருந்தும் அரசியல் தலைமை வழங்கியவர்கள் இன்று பேச்சுவார்த்தை மேடையில் இல்லை. அதற்கு, வடக்கில் தலைமை தாங்கிய பிரபாகரன் உட்பட பலர் அந்த போராட்டத்தில் இறந்துவிட்டனர். சிலர் ஆட்சி இயந்திரத்தின் செல்லப் பிள்ளையாகினர்.

இன்று சிறைபடுத்தப்பட்டிருப்பவர்கள், உண்மையிலேயே, ஏதோவொரு நிலையில் நெருக்குதலுக்கு எதிராக போராடுவதற்கு தூண்டப்பட்ட நபர்கள்தான். சமூகம் என்ற வகையில் ஜனநாயகத்தின் பக்கம், வடக்கின் ஒடுக்கப்பட்டவனின் பக்கம் திரும்பிப் பார்க்க விரும்பினால், எம்மால் செய்யக் கூடிய ஒரு காரியம் உள்ளது. அதுதான், அவர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்வது. அது, தாமதிக்கப்பட்ட கடமையாகவும் உள்ளது, பிரச்சினை என்னவென்றால், சமூகம் என்ற வகையில் அது குறித்த நல்லெண்ணம் இல்லாமைதான். அதிகாரத்தையுடைய மக்கள் சொத்தை கொள்ளையடித்தமைக்காக சிறை செல்லும்போது, அவர்களின் பாதுகாப்பிற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனால், இன்று மகஸீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த கைதிகள் தமது இயக்கத்தையும், போராட்டத்தையும் இழந்துள்ளனர். அநேகமானோர் உறவினர்களை இழந்துள்ளனர். தோல்வியின்போது அவர்கள் இவர்களை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

நந்திக்கடல் சம்பவங்களின் முன்பு, சிங்களவனை சிந்திக்க வைத்ததும், எங்களுக்கு கூறியதும் ஒரே செய்தியைதான்.



அதாவது, புலிகளை தோற்கடித்துவிட்டால் எங்களுக்கு சுதந்திரம் கிடைத்துவிடுமென்று. நந்திக்கடல் சம்பவங்களின் பின்னர், ராஜபக்ஷாக்கள், சுதந்திரம் அப்படி பிறக்காதென்பதை ரத்துபஸவலவிலும், கட்டுநாயக்கவிலும் துப்பாக்கி முனையால் காட்டித் தந்தார்கள். 19வது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வந்தாலும் உங்களுக்கு சுதந்திரம் கிடைக்காதென்பதை, மைத்திரிபாலவும், ரணிலும், அவர்களுக்கு ஆலவட்டம் வீசும் எடுபிடிகளும் இன்னும் சில நாட்களில் காட்டித்தரக் கூடும். அது மாத்திரமல்ல, வடக்கின் ஒடுக்கப்பட்டவனும், கனவு கண்டு விழித்தவன் போல், மைத்திரிபாலாக்கள் சுதந்திரத்தை தருவார்கள் என நினைத்தான். சுதந்திரத்திற்கான வாசலை திறப்பது அதற்கான ஆற்றலை கொண்ட மனிதர்களேயன்றி, அரசியல்வாதிகளல்ல என்பதை வரலாறு எமக்கு கற்றுத் தந்துள்ளது. எனவே, சிறையில் தொடர்ந்தும் அடைத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலைக்காக குரலெழுப்புங்கள். அப்போதுதான், சுதந்திரத்தை பற்றிய நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் உங்களுக்குள் உருவாகும்.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

# சிங்கள மக்களை நம்பலாமா?

**இலங்கையில்** தமிழ் மக்கள் மத்தியில் தன்னை அறிமுகப்படுத்திப் பிரச்சார வேலைகளை முன்னெடுத்து வரும் முன்னிலை சோசலிசக் கட்சி பற்றி உள்நாட்டு வெளிநாட்டு வாழ் தமிழர்கள் அவர்கள் முன் வைக்கும் வாதம் அக் கட்சியை எப்படி நம்புவது? என்பதாகும். அந்த வாதத்தின் அடித்தளமாக அவர்கள் சுட்டிக் காட்டுவது அது இனவாத அமைப்பான மக்கள் விடுதலை விடுதலை முன்னணியிலிருந்து தோன்றியது என்பதாகும். மேலும் பெரும்பான்மை சிங்கள மக்களை அக் கட்சி சார்ந்திருப்பதால் அவர்களை எப்படி நம்புவது? என்பதாகும். அத்துடன் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக அரசாங்கம் திட்டமிட்டு உருவாக்கிய கட்சி எனவும் ஒரு வாதம் வைக்கப்பட்டு வருகிறது.

இவைகள் சிங்கள இனவாத நடைமுறைகளினால் இரண்டு தலைமுறைகளுக்கும் மேலாகப் பாதிக்கப் பட்ட தமிழ் மக்கள் எழுப்பவேண்டிய நியாயமான கேள்விகளேயாகும். இக் கேள்விகள்–சந்தேகங்களின் அடிநாதம் மக்களின் அடிப்படை உரிமைகளாக இருக்கும் பட்சத்தில் இக் கேள்விகளை தமிழ் மக்களையும் அவர்கள் சார்ந்த இயக்கங்கள்–கட்சிகளையும் நோக்கி வைத்தாக வேண்டிய அவசியத்தை நமது கடந்த கால வரலாறு எமக்கு வலியுறுத்திக் கூறி நிற்கிறது.

கடந்த 67 வருட கால சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் தமிழ் மக்கள் எதற்காக? எப்படி? எவரை நம்பியிருந்தார்கள்? பண்டா–செல்வா ஒப்பந்தம் முதற் கொண்டு டட்லி–செல்வா ஒப்பந்தம் மாவட்ட சபை ஊடாக மாகாண சபை வரை யாரை நம்பி வாக்களித்தார்கள்? 30 ஆண்டு கால விடுதலைப் போராட்டத்தை எவரை நம்பி எதற்காக ஆதரித்தார்கள்?

ஆரம்பத்தில் சட்டம் படித்த வக்கீல்களை நம்பினோம். தொடர்ந்து ஆயுதம் பிடித்த போராளிகளை நம்பினோம்.

இந்தியாவை நம்பினோம். பின்னர் சிங்கள ஜனாதிபதி பிரேமதாசாவை நம்பினோம். கடைசியில் தனி ஆயுதப் போரை மட்டும் நம்பினோம். இன்று சர்வதேச நாடுகளை நம்பி ஆகாசத்தை அண்ணாந்து பார்த்தபடி நிற்கிறோம். இந்த இடத்தில்தான் நம்பிக்கைக்கும் தமிழ் மக்களும் உள்ள தொடர்பு அல்லது அவர்களின் நம்பிக்கை பற்றிய புரிதல் என்பது ஆராயப்பட வேண்டியது அவசியமாகி உள்ளது. தன்னம்பிக்கை கொள்ளாத தனி மனிதனும் சுய நம்பிக்கை இல்லாத ஒரு சமூகமும் ஒருநாளும் முன்னேற முடியாது. தன்னை நம்பாத மனிதன் இன்னொருவரை நம்ப மாட்டான். அதேபோல் தன்னுடைய செயற்பாட்டில் நம்பிக்கை கொண்டிருக்காத சமூகமும் ஏனைய சமூகத்தை நம்பாது. எனவே முதலில் தமிழ் மக்கள் தங்கள் சுதந்திரம் தங்களது கைகளில்தான் தங்கியுள்ளது என நம்பவேண்டும். அந்த நம்பிக்கை நமக்கு வந்துவிட்டால் அதனடிப்படையில் செயற்பாடுகளில் ஈடுபடுவோம். அத்தகைய நடவடிக்கைகளுக்கூடாக நாம் செல்லும்போது யாரை நம்புவது? யாரை விலக்குவது என்பது தன்னியல்பாகப் புரிந்துவிடும். அப்போது எங்களை யாரும் மேய்க்கமுடியாது. எவரும் எங்களை மந்தைகளாக்கவும் இயலாது.

பரம்பரை பரம்பரையாக நாம் சொத்துச் சேர்ப்பது ஒன்றையே ஒரேயொரு குறிக்கோளாக் கொண்டே வளர்க்கப்பட்டுள்ளோம். நம்மிடையே பொதுச் சமூக சிந்தனை என்பது கற்பிக்கப் படவில்லை. மாறாக நம்முள்ளே போட்டியும் பொறாமையும் விதைக்கப்பட்டுள்ளது. இந்த மனோபாவம் நம்மை அடுத்தவரைச் சந்தேகம் கொள்ளும்படி ஆக்கியுள்ளது. இந்த சந்தேகம்தான் 30க்கு மேற்பட்ட போராட்ட அமைப்புக்களை எமது மக்கள் மத்தியில் தோற்றுவித்தன. இவைதான் கடந்த காலங்களில் தமிழர்கள் தமிழர்களால் பாதிக்கப்படக் காரணங்களாய் அமைந்தன.

வட–கிழக்கில் தமிழர்கள் இடம்விட்டு இடம்பெயர்ந்த போதும் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் தமிழ் மக்களை பலவந்தமாக அப்புறப்படுத்தவில்லை. மாறாக தென்னிலங்கையில் தமிழர்கள் சொத்துக்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருந்தனர். கொழும்பில் முதலீடுகளையும் செய்து கொண்டிருந்தனர். யுத்த காலத்தில் பாதுகாப்புக் கருதிப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில்தான் தங்க வைத்தனர். ஆகவே சிங்கள மக்களை நம்புவதா? இல்லையா? என்று சந்தேகப்படுபவர்கள் சற்றுப் பின்னோக்கிச் சென்று தாங்கள் கடந்து வந்த வரலாற்றுப் பாதையில் நடந்தவைகளை ஒரு கணம் இரைமீட்டுப் பார்க்கவேண்டும். யார் யாரை நம்பி யார் யார் கெட்டார்கள்? யார் யார் பிழைத்துக் கொண்டார்கள் – இன்று பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள்?

நாம் ஏமாற்றப்பட்டது போலவே சிங்கள மக்களும் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். சிங்கள ஆளும் இனவாதிகளும் தமிழ் ஆளும் இனவாதிகளும் நமது நாட்டை அந்நியருக்கு அடகு வைத்து இலங்கைக் குடிமக்களை நவீன அடிமைகளாக்கி கொண்டிருக்கிறார்கள். நடாத்தப்பட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களை விட அதனை மூலதனமாக வைத்து கோடீஸ்வரர் ஆனவர்கள்தான் அதிகம்.


ஊர் இரண்டு பட்டால் எதிரிக்கு கொண்டாட்டம். இலங்கை இனப் பிரச்சனையில் குளிர் காய்வது யார்? மக்களா? மக்கள் தலைவர்களா? மக்கள் பிரச்சனைகளை ஊதி வளர்த்து லாபம் தேடும் உலக முதலீட்டு முதல்வர்களா?

இலங்கையில் எக்காலத்திலும் சிங்கள–தமிழ் மக்கள் மோதியது கிடையாது. மோதப் போவதும் இல்லை.

மோதியதும் திட்டமிட்டு மோத வைத்ததும் மக்களின் பெயரால் மக்களின் பிரதிநிதிகளே.

இனக் கலவரங்களைக் காட்டி சிங்கள மக்களின் நம்பகத் தன்மையைக் கேள்விக்கு உள்ளாக்குபவர்கள் வட– கிழக்கில் இடம் பெற்ற இயக்கமோதல்களையும் யாழ்ப்பாணத்தின் சாதிக் கலவரங்களையும் எந்தவிதமான கண்ணோட்டத்துடன் பார்க்கப் போகிறார்கள். தமிழன் தமிழனுக்கு என்னமும் செய்யலாம். செய்தால் அது குடும்ப விவகாரம். மூடிமறைக்கப்பட வேண்டியது. சிங்களவன் அதனைச் செய்தால் அது தாங்கமுடியாதது. அது தன்மானப் பிரச்சனை. சிங்களவனிடம் சிறைப்பட்ட ஒரு சில தமிழராவது உயிரோடு திரும்பியுள்ளனர். ஆனால் ஆண்ட தமிழரிடம் அகப்பட்ட எவருமே உயிருடன் திரும்பியதில்லை.

ஆம். முன்னிலை சோசலிசக் கட்சி ஒரேயொரு இனவாத இயக்கத்திலிருந்து பிரிந்து வந்ததுதான். ஆனால் தமிழ் மக்கள் எத்தனை இனவாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களாக இன்று விளங்குகின்றனர். முதலில் தமிழர்களுக்குள் யாரை நம்பலாம் எனக் கண்டு பிடித்த பின்பே சிங்களவனை எப்படி நம்புவது எனக் கேட்கவேண்டும். அதில்லாமல் கேள்வி கேட்பவன் தன்னம்பிக்கை இல்லாத ஒரு மனிதனாகவே இருக்கமுடியும்.



இலங்கையில் இரு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சியை நடாத்திய ம.வி.மு. தமிழ் மக்களை கொன்றதும் இல்லை. ஊரை விட்டு ஓட ஓட முஸ்லீம்–தமிழ் மக்களை விரட்டியதும் இல்லை. கலவரங்களின் போது தமிழர்களைக் காப்பாற்றியதுதான் கடந்த கால வரலாறு. வரலாறு கற்றுக் கொடுத்த பாடம்தான் இன்று முன்னிலை சோசலிசக் கட்சியை இலங்கையர் மத்தியில் உருவாக்கி விட்டுள்ளது.

அதேவேளை இனவாதம் இல்லை என மார் தட்டிய தமிழராகிய நாம் கிராமங்களில் புகுந்து சிங்கள மக்களைக் கொன்றோம். முஸ்லீம் மக்களை ஊரைவிட்டுத் துரத்தினோம். கிழக்கு மாகாண தமிழர்களையே துரோகிகள் பட்டியலில் சேர்த்தோம். இந்த இலட்சணத்தில் இருந்து கொண்டு நம்பிக்கை பற்றிக் கேட்க எமக்கு என்ன தகுதி உள்ளது? இந்த நம்பிக்கைக் கோளாறுதான் இன்று நாட்டில் புதிய பல கட்சிகளையும் நாட்டுக்கு வெளியே நூற்றுக் கணக்கில் அமைப்புக்களையும் ஆயிரக் கணக்கில் ஆளுக்கொரு இணையத் தளங்களையும் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது.

அதேவேளை மு.சோ.கட்சி சம உரிமை இயக்கம் என்ற நடமாடும் ஆய்வுகூடத் தளத்தை இலங்கைக் குடிமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தியுள்ளது. அதனை நம்ப வேண்டாம். அதில் நாம் இணையவேண்டாம். பரஸ்பரம் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். பிரச்சனைகளின் அடிப்படை என்ன என்பதனை கண்டுபிடியுங்கள். மூலதனப் போட்டி இனமோதல் ஆனது எப்படி என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். குடிமக்கள் யாவரும் வளமுடன் வாழக் கூடியதொரு அரசியல் அத்திவாரத்தைக் கட்டி எழுப்புங்கள். அதுவே நாம் எமது வருங்காலச் சந்ததியினருக்குச் செய்யவேண்டிய தார்மீகக் கடமையாகும்.

இதனை விடுத்து வன்னிப் பேரழிவுக்கு வசதியும் வளமும் கொடுத்து மக்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவிக்க ஆசி வழங்கியவர்களிடம் போய் நீதி கேட்டுக் கையேந்தி நிற்பது நம்மை நாமே ஏமாற்றுவதாகும். இது எங்களுக்காக தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த போராளிகளை– –பொது மக்களை அவமதிப்பதாகும்.

எனவே தமிழ் மக்களின் இன்றைய அவசியத் தேவை சிங்கள சாதாரண பாமர பாட்டாளி மக்களுடனான உரையாடலாகும். இதுவரை நாம் முயற்சித்துப் பார்க்காத விடயம் இது ஒன்றுதான். இனி இழப்பதற்கு எம்மிடம் எதுவுமில்லை – உயிரைப் பாதுகாக்கும் எமது உரிமைகளை ஓரணியாகத் திரண்டு நின்று உறுதிப்படுத்துவதைத் தவிர.

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**

படிப்பகம்

**3ம் பக்க தொடர்சி**

**மக்களின் வியாகூலங்களும், .....**

அதாவது நாட்டில் நல்லாட்சி மலர்ந்த நாள் முதல் மேலும் முடுக்கி விடப்பட்டுள்ளது. அதாவது அடுத்த தேர்தலில் அவரவர் வெல்வதற்குரிய வியூகங்கள் வகுக்கப்படுவதற்கான தந்திரோபாயங்கள் கையாளப்பட்டு வருகிறது. ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் முதல் இன்றைய நாள் வரை இலங்கைத் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதிப்படுத்துவது ஒரேயொரு வர்க்க பரம்பரையே. அது வட்டுக்கோட்டை அமெரிக்க மிஷன் கல்லூரியில் ஆங்கில மொழியில் கல்வி பயின்று பிரித்தானிய ஆட்சியாளரின் சலுகைகளுடன் வடக்கிலிருந்து கொழும்பு கறுவாத் தோட்டத்திற்கு குடிபெயர்ந்த ஆளும் அதிகார மேலாதிக்கவாத சிந்தனை படைத்த யாழ் மேட்டுக்குடிக் குடும்பத்தில் பிறந்த சேர் பொன்னம்பலம் இராமநாதன் பரம்பரையே. இந்த மேட்டுக் குடியினரின் சிந்தனையின் அடிப்படையில் (உருவான இலங்கைத் தேசிய காங்கிரஸ் அதிலிருந்து அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அதிலிருந்து) உருவானதுதான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி. அன்று முதல் இந்நாள் வரை தமிழர்களின் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருவதும் இந்த மேட்டுக் குடி சிந்தனைதான். இன்றைய வட மாகாண முதலமைச்சர் கனகசபாபதி விசுவலிங்கம் விக்னேஸ்வரன் (மும்மொழி கற்ற முன்னாள் முதன்மை நீதிபதி) அவர்களின் பாட்டனார் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மைத்துனர் என்பது மக்களின் சிந்தனைக்குரிய விடயமாகும்.

2013ல் வடமாகாணசபைத் தேர்தலின் போது முதன்மை வேட்பாளராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பட்டியலில் தமிழ் அரசுக் கட்சி திரு. விக்னேஸ்வரன் அவர்களை முன்னிறுத்தியது இந்த மேட்டுக்குடி சிந்தனையின் அடிப்படையிலேயே ஆகும். 1970 தேர்தலில் திரு. அல்பிரட் துரையப்பாவைத் தோற்கடிக்க தமிழைச் சரிவரப் பேசத்தெரியாத திரு சி.எக்ஸ்.மாட்டீனைக் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்து யாழ் தொகுதியை வென்றெடுக்கச் செய்ததும் இதே சிந்தனைப்பாடுதான். 2010ல் கொழும்பில் இருந்த திரு.சுமந்திரனைக் கண்டுபிடித்து வடக்கில் கூட்டமைப்பு பா.உ. ஆக்கியதும் அதே சிந்தனைதான். அடுத்து வரப் போகும் தேர்தலிலும் கொழும்பிலிருந்து மும்மொழியும் ஐயந்திரிபுறக் கற்ற சிங்கள மேலாதிக்க ஆளும் வர்க்கத்துடன் சரளமாகப் பழகும் ஒரு சுத்த தமிழனை வடக்குக்கு இறக்குமதி செய்வதற்கான திரைமறைவு வேலைகள் நடைபெறுகின்றன.

இவர்களின் தேர்தல் வியூகத்தின் அடிப்படை பின்வருமாறு அமைந்துள்ளது. (1) எப்படிப்பட்டாவது தேர்தலில் வெல்வது. (2) சிங்கள ஆளும் வர்க்கத்தை கையாள்வது. (3) முதலாளித்துவ நலன்களுக்கு முன்னுரிமை வழங்குவது. (4) நாட்டிலும் அதற்கு வெளியிலும் உள்ள யாழ் மேலாதிக்கவாத சிந்தனை கொண்டவர்களை திருப்திப்படுத்துவது. (5) மேலைநாடுகளின் அபிமானத்தைப் பெற்றுக் கொள்வது. (6) மக்களை மயக்கும் உச்சாடன மந்திரமாக மொழி–இனம்––சுயநிர்ணயம் ஆகியவற்றை உச்சரிப்பது. (7) சாதாரண சிங்கள–தமிழ் மக்கள் ஓரணி சேர்வதை எந்த வழியிலாவது தடுப்பது.

இம்முறை தேர்தல் விழாவில் மூலைக்கு மூலை முள்ளிவாய்க்கால் நினைவு ஸ்தூபிகள் நிறுவப்படலாம். மாவீரர் துயிலும் இல்லங்கள் மறுபடி உயிர்த்தெழலாம். நீண்ட நெடிய கோர யுத்தத்தினால் பாதிப்புற்று அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கும் மக்களின் உணர்சிகள் தூண்டப்படலாம். மக்களின் மனிதாபிமான உணர்வுகள் மழுங்கடிக்கப்படலாம். ஆனால் தூக்கமின்றி கண்ணீருடன் யுத்தவடுக்களுடனும் அதனால் ஏற்பட்ட உடல் – உள நோய்களுடனும் வாழ வழி தெரியாமல் தினமும் செத்து மடியும் மக்களுக்காக இவர்கள் ஒரு சிறிய துரும்பைக் கூட தூக்கிப் போடமாட்டார்கள்.

மக்கள் மாறாதவரை–விழிப்புணர்வு கொள்ளாத வரை–அவர்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்ய யாராவது முன்வரும் வரை மக்களுக்குத் சுட்டிக் காட்டப்படும் உரிமைகள் யாவும் கானல் நீர்தான்.

**தேசப்பற்று என்பது தனது இனத்தவனை நேசிப்பது**

**தேசியம் என்பது அடுத்த இனத்தவனை வெறுப்பது**

**1ம் பக்க தொடர்சி**

**பெண்கள் மீதான வன்கொடுமையை எதிர்ப்போம்! சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு**

உலகின் எந்த மூலையிலும் சிறுமிகள், யுவதிகள், முதியவர்கள் என்ற பேதமின்றி பெண்கள்




துன்புறுத்தப்படுகின்றனர். அவ்வாறான துன்புறுத்தல்கள் இலங்கை சமூகத்திலும் மூலை முடுக்கெல்லாம் பரவலாகிக் கொண்டிருக்கின்றன. அது இன, மத, சாதிய வேறுபாடின்றி தெய்வேந்திரமுனையிலிருந்து பருத்தித்துறை முனைவரையிலும், பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனை வரையிலும் பரவலாகிக் கொண்டிருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு, பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வித்தியா லோகநாதன் எங்களுக்கு சொல்லும் செய்தி இதுதான். உலகின் எந்த இடத்தை எடுத்துக் கொண்டாலும், பெண் என்பவள் பெண்ணாக இருப்பதனால் பாரிய நெருக்குதல்களுக்கு உள்ளாவதை நாங்கள் அறிவோம். தமது தாயாக, மகளாக, அவளை பார்க்கத் தவறிய சமூகத்தில் அவளது பெண்மை சம்பந்தமான பிரச்சினைகளை அவள் எதிர்கொள்கிறாள். இன்று வித்தியாவின் மரணத்திற்கு எதிராக வீதியில் இறங்கியிருக்கும் பாடசாலை மாணவ மாணவிகள், பெற்றோர்கள், மூத்தோர்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளரகள் ஆகியோரின் நியாயமான கோரிக்கையானது, இந்த கொடுமைகளுக்கு எதிராக செயற்படுங்கள்! என்பதுதான்.

ஆனால், தென் பகுதியின் ஊடகங்களும், அரசியல்வாதிகளும், வடபகுதி அரசியல்வாதிகளும் இந்தக் கொடுமையை தமது அரசியல் இலாபத்திற்காக வேறு கோணத்தில் திசை திருப்ப முயற்சிக்கின்றனர். வடக்கில் வாழ்வதும் மனிதர்கள்தான் என்ற அடிப்படையில், அவர்களது உண்மையான பிரச்சினைகளை அறிந்து அது சார்ந்த அரசியல் உரையாடலை கட்டியெழுப்புவதற்கு பதிலாக அதனை வெவ்வேறு கோணத்தில் அலசுவதால், புதிய பிரச்சினைகளை கையசைத்து வரவழைக்க தயாராவது தெரிகிறது. என்றாலும், இன்றைய நாளில் வன்கொடுமைக்கு பலியாகி கொல்லப்படுவதற்கு காரணம் நாறிக்கிடக்கும் தவறான சமூக முறைதான். அதற்கு வித்தியாவும், கொடகெதன சகோதரியும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி, கொல்லப்பட்டு கிருலபன ஓடையில் மிதந்த புதல்வியும், விஜேராம யுவதியும், க்ரிசாந்தி குமாரசுவாமியும், கிளிநொச்சியின் சாரண்யாவும் ஒன்றாக பலியாகின்றனர்.

இது சிங்கள மொழி பேசுபவர்களினதோ, தமிழ் மொழி பேசுபவர்களினதோ தவறல்ல என்பதையும், இது மேற்படி சமூக முறையின் தவறுதான் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே நாளை, வித்தியாவைப் போன்று உங்கள் தாய், சகோதரி, புதல்வி மேற்படி வன்கொடுமைக்கு ஆளாவதை தடுக்க முடியாது. சமூகம் என்ற வகையில் சிந்தித்து, அதற்கு வடக்கு கிழக்கு என்ற பாகுபாடு காட்டாது. சிங்களவர், தமிழர், முஸ்லிம் என பிளவுபடாதிருந்தால் மாத்திரமே அதனை தடுக்க முடியும். இது இலங்கை பெண் மீதான ஒடுக்குமுறை. இலங்கை சமூகத்தின் துன்பியல். எங்களையும் உங்களையும் வருத்தும் சமூக பொருளாதார ஒடுக்குமுறையின் கதை. எனவே, அதன் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ளுமாறும், அதற்காக அணிதிரளுமாறும், அதற்கெதிராக தொடர்ந்து போராடுமாறும், செயற்படுமாறும் உங்ளிடம் வேண்டிக் கொள்கின்றோம்.







**1ம் பக்க தொடர்சி**

**அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி ...**

மக்களுக்கு நல்லாட்சியை வழங்குவதாக உறுதி கூறி பதவிக்கு வந்துள்ள ஜனாதிபதி மைத்திரி சிறிசேனாவும் பிரதமர் ரணிலும் இந்த கைதிகள் குறித்து எந்த செயற்பாடுகளுமற்று காணப்படுகின்றனர். எனவே அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கக் கோரியும், விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாகவும் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.



5ம் பக்க தொடர்ச்சி

## இயற்கை மற்றும் மறுசுழற்சி பற்றிய அறிவு குறித்து!

இந்த அனுபவ அறிவைக் கொண்ட பொதுவான வாழ்க்கைக்குள் நுழைந்தால், வர்க்கரீதியாக செல்வத்தைக் கொண்ட மேல் அடுக்குகளில், அன்றாடம் வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பொருள் மீளப் பாவிப்பதில்லை. இங்கு விழாக்களுக்கு எம்மவர்கள் கையாளுவது, அவர்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறையாக இருக்கின்றது. பொருள் அந்தக் கணத்துடன் ஆயுளை இழந்து விடுகின்ற அளவுக்கு, பொருள் பயன்பாடு பற்றிய உலகக் கண்ணோட்டம் குறுகி வருகின்றது. இதை நோக்கித் தான் உலகம் இன்று பயணிக்கின்றது.

பொருள் தனது பயன்பாட்டுத் தன்மையை இழந்து கழிவாவது என்பது, வர்க்கரீதியான கண்ணோட்டடத்திற்கு விதிவிலக்கானது என்று கிடையாது. உற்பத்தியாகும் பொருள் பணமாக கைமாறியவுடனேயே, அதைக் கழிவாக மாற்றும்



உற்பத்திக் கொள்கை வர்க்கம் கடந்து நுகர்வுக் கொள்கையாகி இருக்கின்றது.

இன்றைய நுகர்வு முறையானது பொருளின் பயன்பாட்டுக்குரிய ஆயுளைக் குறைத்து வருகின்றபோது, அவை கழிவாக மாறுகின்றது. பொருள் என்பது வாழ்க்கையை பகட்டுக்குரியதாகவும் அதை வெளிக் காட்டுவதற்கும், அதேநேரம் அந்தக் கணமே பயனற்ற கழிவாக இருத்தலே பொருள் பற்றிய கொள்கையாகி இருக்கின்றது. நுகர்வு விதி என்பது இயற்கையை அழிப்பதும், சுற்றுச்சூழலை நஞ்சிடுவதுமாக இருக்கின்றது.

இந்த நிலையை உருவாக்குவது செல்வத்தை குவிக்க நடக்கும் உற்பத்தி முறையும், அதை சந்தைப்படுத்த தூண்டும் நுகர்வுக் கண்ணோட்டமுமாகும். இந்த வகையில் போட்டி உற்பத்திக்கு எதிராக மட்டுமல்ல, பன்நாட்டு உற்பத்தியான தனது பொருளை மறுத்து புதியதை கொண்டு வருவதன் மூலமும் நடந்தேறுகின்றது. இங்கு தனது போட்டிப் பொருளை அழிப்பதும், தனது பொருளின் ஆயுளை அழிப்பதும், செல்வத்தைக் குவிப்பதற்கான உற்பத்தி செயல்முறையாக மாறி இருக்கின்றது. பொருளின் நுகர்வுக்காலத்தை பூச்சியமாக்குவதானது, பொருளே பயனற்ற கழிவாக தான் சந்தையில் இயங்க வைக்கின்றது. தனது சொத்துடமை தவிர்ந்த அனைத்தையும், பயனற்ற கழிவாக மூலதனம் மாற்றி விடுகின்றது.

உதாரணமாக பன்நாட்டு தொலைபேசி உற்பத்தியை எடுங்கள். சந்தையில் அவை அறிமுகமாகி விற்பனையில் இருக்கும் அதேநேரம், புதிய தொலைபேசி அறிமுகமாகி தனது முந்தைய பொருளை பயனற்றதாக மாற்றிவிடுகின்றது.

கிடைக்கின்ற சில புள்ளிவிபரங்கள் மூலம் இதை விளங்கிக் கொள்ள முனைவோம். அப்பிள் தொலைபேசியை எடுங்கள். 2007 முதல் வெளியான அப்பிள் 2015க்கு இடையில் குறைந்தது 6 வடிவமைப்புகளையும், 10 வகை மாதிரிகளையும் அதற்குள் பல உட்பிரிவுகளையும் வெளியிட்டு இருக்கின்றது. 2012 இல் 250 மில்லியன் அப்பிள் தொலைபேசி பயன்பாடானது, 2014 இல் 500 மில்லியனை எட்டியது. இதே போல் சம்சுங்கை எடுத்தால் 2013 முதல் குறைந்தது 19 வடிமைப்புகளையும் 151 வகை மாதிரிகளையும் அதற்குள் பல உட்பிரிவுகளையும் வெளியிட்டு இருக்கின்றது. 2013 இல் முதல் 6 மாதத்தில் 40 மில்லியன் விற்பனையை, 2014 இல் 45 நாளில் எட்டியது

இந்த இரண்டு முதன்மையான தொலைபேசி நிறுவனங்கள் ஒன்றையொன்று அழித்தபடி, தனது முதல் வெளியீட்டையும் அழித்துக் கொண்டுதான், தனது செல்வத்தைக் குவிக்கும் பொருளாதார முன்னேற்றத்தைச் சந்திக்கின்றது. இங்கு போட்டிப் பொருளை மட்டுமல்ல, தனது பொருளையும் அழிக்கின்றது. அதாவது இயற்கையை அழித்தும், பொருளைக் கழிவாக்கி சூழலை நஞ்சாக்குவதே இங்கு வளர்ச்சியாகி இருக்கின்றது.

உதாரணமான சீனாவில் இவர்களின் உற்பத்தியை முன்னெடுக்கும் முக்கிய தொலைபேசி உற்பத்தி நிறுவனம், ஒரு தொன் தொலைபேசிகளை உற்பத்தியாகும் போது 70000 லீற்றர் கழிவுகளை நீரில் கலந்து விடுகின்றது. இந்தப் பின்னணியில் 2010 இல் 152 மில்லியன் (152000000) தொலைபேசி பாவனையில் இருந்து கைவிடப்பட்டது. அதேநேரம் இதில் 14 மில்லியன் தான் மறுசுழற்சிக்கு உள்ளானது. இதேபோல் 27 மில்லியன் தொலைக்காட்சி பெட்டிகள் கைவிடப்பட்ட நிலையில் 6.3 மில்லியன் மறு சுழற்சிக்குள்ளானது. 158 மில்லியன் கம்பியூட்டர் கைவிடப்பட்ட போது 48 மில்லியன் மறு சுழற்சிக்குள்ளானது.

பொருள் என்பது பயன்பாட்டு ஆயுளை இழந்து கழிவானது உலகமயமாதலில் மிகப் பிரமாண்டமானதாக மாறி இருக்கின்றது. உற்பத்திக்கான மூலப்பொருட்கள், உற்பத்தி முறை, நுகர்வு முறை, மறுசுழற்சி என்ற எங்கும், இயற்கையை அழித்து சூழலை நஞ்சாக்கி பணத்தை பெருக்கும் உற்பத்தி முறையே காணப்படுகின்றது.

நாளை 100 சதவீத மறுசுழற்சி நடந்தாலும் இயற்கை அழிவுக்கு இதுவொரு தீர்வா? மறுசுழற்சி இயற்கையை பாதுகாப்பதற்காகவா முன்னெடுக்கப்படுகின்றது?

இல்லை. மறுசுழற்சி என்பது, இன்று பிரமாண்டமான மூலதன சுழற்சியாக மாறி இருக்கின்றது. செல்வத்தைக் குவிக்கும் தொழில் துறையாக, மறுசுழற்சியும் மாறி இருக்கின்றது. மூலதனத்தை பெருக்கும் வண்ணம், மறுசுழற்சிக்கு புதிய வரிகளைக் கூட மக்கள் மேல் சுமத்தி வருகின்றனர். நுகர்வின் ஆயுளை அழித்து, மறுசுழற்சிக்கு பொருளைக் கழிவாக கொண்டு வருவது, சுற்றுச்சூழலின் பொதுக் கொள்கையாகி இருக்கின்றது.

இந்தப் பின்னணியில்

1.மனித தேவைக்கான உற்பத்தி என்பதற்கு பதில் செல்வத்தை குவிக்கும் பொருள் உற்பத்திக் கொள்கையானது இயற்கையை சூறையாடுகின்றது.

2.பொருள் உற்பத்தியானது பயன்பாட்டுக்குரியது என்பதற்கு பதில், பயன்பாட்டை அழிப்பதை நுகர்வுக் கொள்கையாக்கி சூழலை நஞ்சாக்குகின்றது.

3.ஓய்வற்றதும், விரைவான உற்பத்திக் கொள்கையானது இயற்கையை உறிஞ்சி சூழலை நஞ்சாக்குவதை விரைவாக்குகின்றது

இந்த உலகமயமாதல் கொள்கையானது

1.இடைவிடாது ஒவ்வொரு கணமும் உற்பத்தி, இயற்கையை உயிரற்ற சடப்பொருளாக மாற்றுவதை வேகப்படுத்தி இருக்கின்றது.

2.பொருளின் பயன்பாட்டுக் காலத்தை இல்லாதாக்கி பயன்பாடற்றதாக மாற்றும் உற்பத்திக் கொள்கையானது, சூழலை உயிரற்ற சடப்பொருளான உலகமாக மாற்றுகின்றது.




3.செல்வத்தைக் குவிக்கும் போட்டியும், சந்தையை வெறுமையாக்கும் கொள்கையும், பொருளை பயனற்ற கழிவாக மாற்றுகின்றது.

4.மனித உழைப்புக்கும் நுகர்வுக்கும் ஓய்வை இல்லாதாக்குவதன் மூலம், இயற்கையை வரைமுறையின்றி சூறையாடி அழிப்பதையே பொருளாதார வளர்ச்சியாகவும், வேலைவாய்ப்பாகவும் முன்வைக்கின்றது. அதாவது 24 மணி நேர உற்பத்தி, 24 மணி நேர நுகர்வு என்ற கொள்கை இன்று முன்னெடுக்கப்படுகின்றது. இன்று நுகர்வதற்காக கடைகள் மூடப்படுவதில்லை. அதேபோல் ஓய்வுநாளாக இருந்த ஞாயிற்றுக்கிழமையை வேலைநாட்களாகவும், ஓய்வு என்பது நுகர்வுக்குரிய நாளாகவும் மாறி வருகின்றது. ஓய்வின்றி இயற்கையை சூறையாடுவது, இதன் மூலம் தொடங்கியுள்ளது.

இந்த பொதுப் பின்னணியில் உற்பத்தியும், நுகர்வும், மறுசுழற்சியும் மனித தேவையிலான இயற்கையைப் பாதுகாப்பதைக் நோக்கமாகக் கொண்டதல்ல, மாறாக செல்வத்தைப் பெருக்குவதை அடிப்படையாகக் கொண்ட இயற்கை அழிப்புக் கொள்கை தான், உண்மையான சுற்றுச்சூழல் பிரச்சனையாகும்.

தொடரும்


9ம் பக்க தொடர்ச்சி

## ஆண்களால் தினம், தினம் கொல்லப்படும் வித்தியாக்கள் !!!

தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்தகுடி தனக்கு முன் உறுப்பு ஒன்று இருப்பதால் அவள் பொன்னும், பொருளும் கொண்டு வந்தால் தான் மணம் செய்து கொள்ளுவேன் என்று இந்த இருபத்தொராவது நூற்றாண்டிலும் சொல்கிறது. கோவிலில், கிறிஸ்தவ தேவாலயங்களில் அவள் சமமானவள் இல்லை, அவள் மதகுருவாக முடியாது. இஸ்லாமியர்களின் பள்ளிவாசலில் அவள் பக்கத்திலே நின்று தொழக் கூட முடியாது. அவள் அவர்களின் மனதை திசை திருப்பி விடுவாளாம். ஆம், ஆண்டவன் ஆண்கள், பெண்கள் அனைவரையும் படைத்தவன் என்று கதைகளில் கூறப்படுபவர்கள் கூட ஆண்களிற்கு மட்டும் தான்.

பாலியல் வன்முறைகளிற்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று குரல்கள் எழுகின்றன. காவல் துறையும், நீதி மன்றங்களும் கடுமையான நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என்று குரல்கள் எழுகின்றன. பாலியல் வன்முறை, களவு, கொலை, ஊழல், லஞ்சம், அதிகார துஸ்பிரயோகம் என்று உடல் முழுக்க சேறு பூசிக்கொண்டிருக்கும் இலங்கையின் அதிகாரவர்க்கம், குற்றங்களின் பிறப்பிடம் எப்படி நடவடிக்கை எடுக்கும். பெண்களை போகப் பொருளாக, நுகர்வுப் பண்டமாக மட்டும் சித்தரிக்கும் வணிகக் கலாச்சாரம், முதலாளித்துவ பொருளாதாரம் இருக்கும் வரை அவள் விடுதலையாக முடியாது. பெண்ணை அடிமையாக நினைக்கும், நடத்தும் சமுதாயம் மாறாதவரை எப்படி நீதி கிடைக்கும்?.

ஆணாதிக்க சிந்தனைக்கு எதிராக பெண்கள் அணி திரள வேண்டும். பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசம் என்று மடமை பேசும் மதங்களிற்கு எதிராக அணி திரள வேண்டும். வன்முறைகளிற்கு எதிராக அமைப்பாக அணி திரள வேண்டும். சமுதாயத்தின் விடிவிற்காக போரிடும் முற்போக்கு அணிகளுடன் இணைந்து போராட வேண்டும். ஆணும், பெண்ணும் இணைந்தது தான் அகிலம் என்று அகங்கள் மலர வர வேண்டும் ஒரு புரட்சி.




வெறுப்பு, அடிமைத்தனம் உடைத்து அன்பு எனும் விடுதலையின் பாடல் ஒலிக்க வர வேண்டும் ஒரு புரட்சி.



படிப்பகம்

# போராட்டம்

41–32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய
தொலைபேசி / தொலைநகல் : 094 113185692
mpssrilanka@gmail.com, http// www.peoplesstruggle.com

## முதலாளித்துவ ஜனநாயகத்தை தோற்கடித்து உழைக்கும் மக்களின் ஜனநாயகத்தை நிறுவுவோம்

# மூன்று போராட்டங்களும் ஒரு உண்மையும்

கடந்து போன வைகாசி மாதம் இலங்கையை ஒட்டுமொத்தமாக உலுக்கிய மாதம் என்றால் மிகையாகாது. 2009 வைகாசி மாதத்திற்குப் பின் இலங்கையின் வடபகுதி மறுபடியும் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தது. முள்ளிவாய்க்காலின் பல்லாயிரம் மக்களின் ஓலக்குரலும் கண்ணீரும் ஏற்படுத்திய தாக்கத்தை விட, தீவகத்தில் மாணவி ஒருத்திக்கு நடந்த வன்கொடுமை இன, மொழி, மத, பிரதேச வேறுபாடின்றி இலங்கையர் அனைவரையும் உலுக்கியது. தெருவுக்கு வந்து பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளுக்கு எதிராகப் போராட வைத்தது.

இப்போராட்டத்தின் ஆரம்பம் யாழில் எழுச்சி பெற்றது. அமைதியாக ஆரம்பித்த போராட்டத்தில், கொலையைச் சரியான வகையில் நீதித்துறை கையாள வேண்டும், கொலைசெய்யப்பட்ட வித்தியா சிவலோகநாதனுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென கோரிக்கைகள் வைக்கப்பட்டது. ஆனால், வெகு விரைவாகவே வித்தியாவுக்கு நியாயம் கோரிய போராட்டம், தமிழ் தேசிய–நிழலுலக அரசியல் வாதிகளின் தூண்டுதலால் வன்முறையாக மாறி யாழ்ப்பாணமே பற்றி எரிந்தது. மறுபடியும் முப்படைகள் வடக்கின் வீதிகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன. நூற்றுக்கு மேற்பட்ட இளையோர் கைது செய்யப்பட்டனர். காரணம், யாழ். உயர் நீதிமன்றத்தை சேதப்படுத்தியது மற்றும் போலீஸ் மீது வன்முறையைப் பிரயோகித்தது போன்ற குற்றங்களாகும். இக் கைதுகளுடனேயே போராட்டங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அல்லது தோற்கடிக்கப்பட்டது. திட்டமிட்ட வஞ்சக அரசியல் காய் நகர்த்தல்களால், தவறான பாதைக்கு வழிகாட்டப்பட்டு வடக்கு இளையோரின் போராட்ட முனைப்பு மழுங்கடிக்கப்பட்டது.

மறுபுறத்தில், முப்பது வருடங்கள் நடந்த போரின் போது துடிக்காத சகோதர இனமக்கள் புத்தளம் தொடக்கம் காலி ஈறாக, தென்பகுதியெங்கும் தீவகக்கொடுமைக்கு எதிராகக் குரல்கொடுத்தார்கள். மன்னம்பேரி தொடக்கம் வித்தியா வரை இலங்கையில் நடைபெற்ற அனைத்துப் பாலியல் கொலைகள், கொடுமைகளுக்காக நியாயம் கேட்டார்கள். ஒட்டுமொத்த இலங்கைப் பெண்கள் அனைவரின் உரிமை சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். இப்போராட்டத்தில் அவர்கள் இசைப்பிரியா போன்ற போராளிகளையும் மறக்கவில்லை. தென்பகுதிமக்களின் இந்த நேசக்கரம் நீட்டுதலைச் சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்றனர் சில தேசியக்கனவான்கள். அதே நபர்கள், ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஹெலிஹொப்ரரில் பறந்து சென்று, கொலை செய்யப்பட்ட மாணவியின் குடும்பத்தைச் சந்தித்ததை வியந்து பாராட்டுகின்றனர். ரணில் –மைத்ரி அரசை ஜனநாயகத்தின் உச்சக்கட்டம், தமிழ் மக்களின் விடுதலை நட்சத்திரம் என்பதாகப் பரணி பாடுகின்றனர்.

ஹெலிஹொப்ரரில் பறந்து மைத்ரி துக்கம் விசாரித்த நாளுக்கு முதல் நாள்(24.05.15), கொலன்னாவ – மீதொட்டமுல்ல பகுதியில், குப்பைக் கழிவுகளைக் கொட்டுவது நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி போராடிய மக்கள் மீது ரணில் –மைத்ரி அரசு தனது படைகளை ஏவித் தாக்குதல் தொடுத்தது. மூவின மக்களும் இணைந்து முன்னெடுத்த அப்போராட்டம் வலிமையான இராணுவக்கரம் கொண்டு நசுக்கப்பட்டது. இம் மக்கள் போராடுவது முதல் முறையல்ல. முன்பு ஐந்து தடவைகளுக்கு மேலாகப் போராட்டம் நடத்தி, மஹிந்த அரசின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு உள்ளானவர்கள் இம் மக்கள். ஆனாலும், போராட்டம் புதிய வழிகளில் தொடர்கிறது.

பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் பிரிந்துபோகும் உரிமையும் கேட்கும் தமிழ்தேசியம், தனது சொந்தச் சனங்களுக்கே சாதி அடிப்படையில் உரிமைகளை மறுப்பதும், அவர்களை சமூக ஒடுக்குமுறைகள் மூலம் வன்கொடுமைக்கு உள்ளாக்குவதொன்றும் புதிய விடயமல்ல. தமிழ்தேசியத்தின் பெயரால் அதிகாரம் செலுத்தும் தமிழ் அரசுக்கட்சி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், திருமலை நகரசபையில் சாதிய வேள்வி நடத்திவருகின்றனர். இவர்களின் இந்தச் சாதிவெறி வேள்விக்குப் பலியாகி வருவோர், நகரசுத்தித் தொழில் புரியும் உழைப்பாளர்களாகும். தற்போது இம்மக்கள் தொழிற்சங்கம் அமைத்துத் தம் உரிமைகளுக்காக– சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிவருகின்றனர். இம் மக்களின் போராட்டங்களை மழுங்கடிக்க, ஆதிக்கசாதிகளும், அவர்களின் அதிகாரவர்க்கமும் பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால், போராட்ட முனைப்புக் கொண்ட மக்களை, ஒடுக்குமுறையாளர்களால் வெல்ல முடியவில்லை.

இம் மூன்று போராட்டங்களும் ஒரு மிக முக்கியமான உண்மையை எமக்கு உணர்த்துகின்றன. யாழில் நடந்த போராட்டம் மக்கள் நலன் சார்ந்து இயங்கும் சரியான தலைமை இல்லாததால் தான் மழுங்கடிக்கப்பட்டது. இளையோரின் எழுச்சி சில அரசியல் விசமிகளின் நலன்களுக்காகப் பலிகொடுக்கப்பட்டது. அதேவேளை, அரசுக்கு எதிராக நடாத்தப்படும், கொலன்னாவ – மீதொட்டமுல்ல போராட்டமும், திருமலை உழைக்கும் மக்களின் உரிமைக்கான போராட்டமும் வீரியத்துடன் முன்னேறுகிறது. காரணம், மக்கள் நலம் சார்ந்து இயங்கும் சக்திகளும், பாட்டாளிவர்க்கச் செயற்பாட்டாளார்களும் இப்போராட்டங்களுக்குத் தலைமை வகிப்பது தான்! இதன் அடிப்படையில், ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் உரிமைகளையும் பெற, ஒட்டுமொத்த இலங்கைக்குமான– இன, மத, சாதிய, பிரதேச பேதமற்ற தலைமையை உருவாக்கி போராட்டசக்திகளை ஓரணியில் திரட்ட வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.



தொழிலாளர் தினம் – இலங்கை




தொழிலாளர் தினம் – பிரான்ஸ்




தொழிலாளர் தினம் – இங்கிலாந்து



தொழிலாளர் தினம் – இத்தாலி

**முக மாற்ற ஆட்சி மூலம் தருவதாகக் கூறிய ஜனநாயகம் எங்கே?**


41- 32 கெந்தஹேன வத்தை, தெபானம, பன்னிப்பிட்டிய வசிக்கும் ஜீட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்டரா எட்வடைவிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.



படிப்பகம்